
# தொழிலாளிகளுக்கு ஒரு சுடர் விளக்கு

# THE GLORY OF WORKING MEN



BY

HENRY T. TAMBIMUTTU

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Matt Talbot

மத் தல்போத்து

005212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Matt Talbot

## The Glory of Working Men

925
TAM

---

# தொழிலாளிகளுக்கு ஒரு சுடர் விளக்கு

---

## மத் தல்போத்துவின் வரலாறு

---

ஹென்றி த. தம்பிமுத்து அவர்கள்
ஆங்கிலத்திலிருந்து இசைத்தெழுதியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Nihil obstat:*
**S. Gnana Prakasar, O.M.I.**

*Imprimatur:*
**J. Emilianus Pillai, O.M.I.,**
*Vicar General.*

*Jaffna, 14-4-1941.*

## முன்னுரை

டபிளின் மாநகரக் குருமாருள் ஒருவரான வண. ஜேம்ஸ் எவ் கசிடி என்பவர் அந்நகரத் தொழிலாளியாயிருந்த மத் தல்போத்துவைப்பற்றி எழுதிய சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு, அவ்வுத்தம கிறீஸ்தவ தொழிலாளியின் சீவிய வரலாற்றில் இருந்து சில படிப்பினைகளை எடுத்தெழுதத் துணிந்தேன்.

முதன் முதல் அத்தொண்டரின் சீவிய சுருக்கத்தை விளங்கவைப்பது நன்று.

பழைய கத்தோலிக்கு நாடுகளுள் ஒன்றாகிய அயர்லாந்து தேசத்தின் டபிளின் மாநகரிலே 1856-ம் ஆண்டு வைகாசி மாசம் 2-ந் திகதி தல்போத்து பிறந்தார். அவருடைய பெற்றார் வறுமையின் நிமித்தம் அவரைப் பன்னிரண்டாம் பிராயம் வரைக்குமே கிறீஸ்த பாடசாலைகளில் கல்வி பயிற்றுவித்தார்கள். படிப்பை நிறுத்தியவுடன் அவர் உவைன் வியாபாரிகளிடம் வேலைக்கமர்ந்து, அச் சிறுவயதில் தானே அடிதலை தெரியாத குடிவெறிக்கு ஆளாகிவிட்டார். இதன் பின்னர் துறைமுகப் பகுதியில் ஒரு தொழிலாளியாய்ச் சேர்ந்து வேலைசெய்யும்போது, உவைன் வியாபாரிகளிடம் இருந்து தொற்றிய துர்ப்பழக்கம் இன்னும் அதிகரித்தது. பீர் குடிவகை துவக்கம் உவிஸ்கி மட்டும் விட்டுக்கட்டியதால், அவருக்கு மானம் மரியாதை அற்றுப் போனது. இதனால் அவர் தம் பெற்றாருக்கு அவமானம் உண்டானதென்று கண்டு, குடியை சிறிதுகாலம் விட்டு, ஓர் கற்சிற்பனுக்குப் பணிவிடை செய்தார். என்றாலும், குடிவெறி அவரைத் துரந்து துரந்து தனக்கு அடிமையாக்கிக் கொண்டேவந்தது. இப்படிக்கொத்த ஆபத்தான அந்தஸ்தில் இருந்தபோதிலும், அவர், ஞாயிற்றுக்கிழமைப் பூசைகாண்பதை மாத்திரம் விடவில்லை. அது ஒன்றுமே அவர் பிரமாணிக்கமாய் அநுசரித்த பத்திக்கிருத்தியம்.

இப்படியிருக்கையில், ஓர்நாள், மது அருந்தக் கையில் அரைக்காசுமில்லாமற் போய்விட்டது; கடன் கொடுப்பாருமில்லை; தமது உற்றதோழரும் உதவாமற் போனதால், அப்போதே அவரது ஞானக்கண் திறபடுவதாயிற்று. உடனே, அவர் வேறு மனிதனானார். 1884-ம் வருஷம் மதுவிலக்க வாக்குத்தத்தம் செய்து கொண்டார். பின்னும் அதை உறுதிப்படுத்தும் பொருட்டு சற்பிரசாதநாதரின்முன் அடிக்கடி செபஞ்செய்து வந்ததால், குடிவெறிச் சனியனைப் பூரணமாகச் செயிக்கலானார்.

அப்பால், அவர் தூய்மை என்னும் வெற்றிக்கொடியைப் பற்றிப்பிடித்து நன்மை என்னும் துரகமீதேறிப் புனிதப் பாய்ச்சல் பாயத் தொடங்கினார். அல்லும் பகலும் செபஞ்செய்வார். அலுவல் மத்தியிலும், தருணம் வாய்க்கும்போதெல்லாம் கடவுளைத் தியானிப்பார். தேவநற்கருணைச் சன்னிதானத்திலேயே அதிகப்பற்றாய்ச் செபஞ்செய்வது அவர் வழக்கமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் தமது சரீரத்தையும் கடினமாய்த் தண்டிப்பார். 14 வருடங்களாய் இரவும் பகலும் தமது மாமிசத்தை இருப்புச் சங்கிலிகளால் வரிந்து கட்டிக்கொண்டிருந்தார். அதைப் பிறர் அறிந்துவிடாதபடிக்கு, தாம் வைத்தியசாலைக்குப்போயிருக்க நேர்ந்தபோது, சங்கிலிகளைக் கழற்றிவைத்துவிட்டார். ஒருசந்தி உபவாசமே அவரது அனுதின அனுஷ்டிப்பு. சீவனோடிருக்கிறதற்குப் போதுமான உணவுக்கு மேலே சாப்பிடமாட்டார். மரத் தலையணையில் துயிலுவார். வெறும் முழந்தாளில் இருந்து வாசித்துச் செபிப்பார். சம்பூரண தன்மறுப்பை அனுசரிக்கும்பொருட்டு விவாகஞ் செய்யாதிருந்தார். தமது சொற்ப சம்பளத்தின் பெரும்பாகத்தை வறியவர்களுக்கு ஈந்தும், வேதப்பரப்புதலுக்காகச் செலவழித்தும் வருவார்.

தல்போத்து, தாழ்மையினாலே, தமது தவக்கிருத்தியங்களை மறைத்து வந்திருந்தபோதிலும், அவைகள் மரணத்தின்பின் பிரசித்தமாயின. நோயாளர் சாலையில் இருந்தபோதும் பெலனுள்ளபோதெல்லாம் தேவநற்கருணை சந்திக்கத் தவழ்ந்து தவழ்ந்து செல்வார். வருத்தம் சற்றுச் சுகமானவுடன் அச்சாலையைவிட்டு நீங்கினாலும், அவரைப் பீடித்தநோய் முற்றாய் விலகவில்லை. தமது சுகவீனத்துடன் இருவருடம் சீவித்தார். எவ்வளவு சுகத் தாழ்வாய் இருந்தபோதிலும், தமது கடுந் தபசை விடாமல், நோயோடு போராடினார். பாயும் படுக்கையுமாகுமட்டும் பூசைகாண்பதே அவரது ஆசை. ஓர் காலை திவ்விய பலியைக் காண உன்னி, பெலவீனத்தையும் பாராமல் புறப்பட்டு, தொமினிக்க சபைக் கோயிலுக்குச் செல்லுகையில் டபிளின் வீதியிலே திடீரென விழுந்து 1925-ம் ஆண்டு ஆனிமாசம் 7-ந் திகதி தமதாத்துமத்தைப் படைத்தவர் திருக்கரங்களில் ஒப்புக்கொடுத்தார்.

# தொழிலாளிகளுக்கு ஒரு சுடர்விளக்கு

## முதலாம் அதிகாரம்

### உத்தம தவத்தாளி

இப் பூவுலகின்கண் வாழும் மாந்தருள் துறவறமே மேலான பாக்கியத்துக்கு வழி என்றுணர்ந்து துறவிகளானோர் பலர். அவர்களில் கிறீஸ்தவ துறவிகளே அதி விசேடம்பெற்று விளங்கினார்கள். கிறீஸ்தவ துறவிகள் அயர்லாந்து தேசத்திலேயே அதிக பிரபலியம் அடைந்தோர் ஆனார்கள். அப்புண்ணியபூமியில் எங்கும் துறவிகளின்மடங்கள் காணப்பட்டன. அம் மடங்களில் சேர்ந்திருந்த துறவிகள் சன்னியாச அந்தஸ்துக்குரிய சட்ட திட்டங்களின்படி தாங்களே ஒழுகிவந்ததோடு, தங்களைப்போல் தவம்புரிய விரும்பிய பிறருக்கும் துறவற அனுஷ்டானங்களைப் பயிற்றிவந்தார்கள். சந்நியாச சீவியத்தால் உண்டாகும் தற்பரித்தியாக பயிற்சி, ஒருவிதத்தில், அத்தேசம் எங்கும் பரவி இருந்தது எனலாம். இதுதான் வேதகலாபனை காலங்களிலே அயர்லாந்தின் மக்களை விசுவாசத்திலே அத்துணை உறுதியாய் நிலைக்கப்பண்ணிற்று என்று காண்கிறோம். அநேக நூற்றாண்டுகளாய் சத்திய வேதத்தை வேருடன் அறுக்கத் துணிந்த பதிதரை ஐரிஷ்காரர் எதிர்த்துப் போராடி வெல்லச்செய்தது அவர்களிடம் விளங்கிய தற்பரித்தியாகப் பழக்கமே. துன்பதுரிதங்கள் என்னும் சிலுவையில்லாமல் மெய்யான கிறீஸ்தவ சீவியம் இல்லை என்றது ஐரிஷ்காரர் நன்றாக உணர்ந்துகொண்ட ஒரு உண்மை.

மத் தல்போத்து மெய்யான ஒரு ஐரிஷ்காரன் ஆனபடியால், சிலுவையினாலேதான் சகல நன்மையும் உண்டாகும் என்றது அவருக்குப் பிதிரார்ச்சியமாய்க் கிடைத்த ஒரு போதகம் ஆயிற்று. இவ் ஏழைத்தொழிலாளி தவஞ்செய்யும் வகையைச் சன்னியாச மடங்களிலிருந்து கற்காவிட்டாலும், இவருடைய கடின தவக்கிரியைகள் பண்டைக்காலத்து இருஷிகள் சன்னியாசிகளின் தபசுக்கு எவ்விதத்திலும் குறையாதனவாயிருந்தன. இவரது சீவனப்போக்கையும் வசதிகளையும் உற்றுநோக்கினால், இவர் புரிந்த தவம் முற்காலத்துத் தவமுயற்சிகளிலும் விசேஷித்திருப்பதையே காணலாம். ஆதிநாட்களிலே தவமுனிவர்கள் காட்டைச் சுயநாடாகவும், மலைக்குகையை வீடாகவும் பாவித்ததைக் கேள்விப்பட்டிருக்கிறோம். கைத்தொழிற் சீர்திருத்தம்மிகுந்து கர்த்தனை அசட்டைபண்ணுவோர் வெகுத்த இந்நாட்களில் சனம் நெருங்கிய தலைநகரையே தமது வனாந்தரமாகவும், சந்தடி செறிந்த வீதிகளையே தமது சன்னியாச மடமாகவும், ஓர் வாடகைக் கொட்டிலின் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையையே தமது தவக்குகையாகவும் பாவித்த இத்தொண்டரின் சீவியம் வியக்கத்தக்கதே. இவர் தமது சரீரத்துக்கு இட்ட சித்திரவேதனைகளையும், பண்ணிய ஆத்தும பரித்தியாகத்தையும் உலகத்தினர் கண்களுக்குப் புலப்படாமல் தம்முள் அடக்கிக்கொண்டு சனசஞ்சாரத்தில் அந்தரங்க சீவியம் நடாத்தியது இவரது திடசித்தத்தையும் தற்பலி விருப்பையும் காட்டுகின்றது.

### ஊண் ஒறுத்தல்

தல்போத்து, தாம் மனந்திரும்பியநாட் துவக்கத்திற்றானே தற்பரித்தியாக சிந்தனையில் வேரூன்றிவிட்டார். சிலுவையில் அறையுண்ட நாதரின் சேனையில் தாம் சேர்ந்துகொண்டதை நினைப்பூட்டிக்கொள்ளும்படி தமது சட்டைக்கையின் முன் தொங்கலில் இரு குண்டூசிகளை சிலுவை வடிவமாய் குத்திவைத்திருந்தார். அனுதினம் வேலையால் வீட்டுக்கு வந்தவுடன் முழந்தாளிலிருந்து சிலுவையை முத்திசெய்து தன்னய மறுப்பில் தம்மை உறுதிப்படுத்துவார். இப்படியே புதுச்சீவியம் செய்யத்துவங்கிய தினங்களில், தல்போத்து ஒருக்காலும் பசியமரச் சரியாய் உண்டதுமில்லை. புதன் வெள்ளி சனிக்கிழமைகளில் இறைச்சி சாப்பிட்டதுமில்லை. இரவில் தமது சரீரத்தைமூடப் போதிய துணியின்றி ஓர் பலகைப் படுக்கையில் துயிலுவார். மதுபானத்தை அடியோடு விட்டிட்டதுமன்றி, தொழிலாளிகள் அதிகம் விரும்பும் புகையிலைக் குடியைத்தானும் நிறுத்திக்கொண்டார். இவ்வித ஒறுப்புக்களால் கடும்வேலை செய்யும் ஒரு கைத்தொழிலாளி சிலுவைப்பாதையில் எவ்வளவு விரைவாய்ச் சென்றிருப்பார் என்றது சொல்லாமலே விளங்கும்.

காலகதியில் தபசை அதிகரிக்கச்செய்வதற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு முழுச்சாப்பாடு அல்லது இரு அரைச் சாப்பாடும், திங்கட்கிழமைகளில் பழைய ரொட்டியும் வெறும் தேய்நீரும், செவ்வாய் வியாழக்கிழமைகளில் ரொட்டி தேயிலை நீருடன் கொஞ்ச இறைச்சியுமே அவரது உணவாயிற்று. அயர்லாந்து முதலிய சீதள தேசங்களில் இறைச்சியே பிரதான உணவு என்றதை நாம் நினைந்து கொள்ள வேண்டியது. புதன்கிழமைகளில் மாமிசம் அகற்றி கொஞ்ச வெண்ணெய் பாவிப்பார். வெள்ளிக்கிழமைகளில் முழு உபவாசமும், சனிக்கிழமைகளிலும் திருநாட்களுக்கு முந்திய நாட்களிலும் பால்சேராமல் கடின ஒருசந்தியும் காப்பார். தபசுகாலத்தில் அனுதினம் மாமிசம் வெண்ணெய் பால் ஆகியவைகளை விலக்கி, இருதரம் அரைவயிற்றுக்குச் சாப்பிடுவார். ஆனிமாதத்தில் ஒவ்வொருநாளும், திரு இருதய மகிமையின்பொருட்டு, அதேமாதிரி உபவாசஞ் செய்து வருவார். இவ் ஒறுப்பான சீவியத்தில் மற்றவர்களும் பங்குபற்றினாலோ என்ற ஆவலினால் தம் உற்ற சிநேகிதருக்கு இரகசியத்தில் இவைகளைப்பற்றிப் பேசத்துணிந்தாலும், தாழ்மையினாலும் தமது நிலைபரத்தின் நிமித்தமும் இவ்விஷயமாய் பிறரோடு பேசாதிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தல்போத்து தமது வாணாட்களை வீணாக்காமல் தம் அந்தஸ்துக்குத் தக்கபடி செய்த புண்ணிய தவமுயற்சிகள் அவரை ஓர் பெரிய வீரத்துவமுள்ள தவத்தாளியாக்கப் போதுமானவைகள் என்றாலும், அதின்மேலும் இராப்பகலாய்த் தமது அவயவங்களைத் தொல்லைப்படுத்தி இறுக்கி வதைக்க இருப்புச் சங்கிலிகளையும் அணிந்திருந்தார். இவைகள் கொடிய சர்ப்பங்களைப்போலத் தம்மைச் சுற்றியபடியும், மரத்தலையணை தமது சோர்ந்த சிரத்தைத் தாங்கியபடியும், கடுத்தமான பலகைப்படுக்கை தமது களைத்த சரீரத்தை அண்டி வருத்தியபடியுமே படுத்துறங்குவார். இவ்விளைப்பாறுதலும் இருபத்துநாலு மணித்தியாலத்திற்கு ஒரே தடவையேயாம். களைப்பும் இளைப்பும் மிஞ்சி, கையும் காலும் சோர்ந்து போகும்போதே சடக்கென விழுந்து படுத்து சிலமணித்தியாலம் மாத்திரம் துயிலுவார்.

அவர் அணிந்திருந்த சங்கிலிகளோடு அவருடைய சரீரமும் மனமும் எவ்வளவு பழகிப்போய்விட்டன என்றால், பிறரும் இவ்விதமான தவத்தைத் தழுவி இதனால் வரும் ஞான ஆனந்தத்தைச் சுகிக்கவேணுமென்று விரும்புவார். இதிலே அவர்கொண்ட அபிமானம் அர்ச். சிலுவைச் சின்னப்பருடைய தவஅபேட்சைக்கு ஒப்பிடத்தக்கது. ஆயினும், உபவாச விஷயத்திலே அவர் தாழ்ச்சிவிருப்பினால் பிறரை ஏவப் பின்னிட்டதுபோல, இந்த விஷயத்திலும் பின்னிடலானார். ஓராளுக்கு மாத்திரம் இவ்வித சரீரதண்டனையின் நன்மையை அவர் இரகசியமாய் உணர்த்தி, ஒரு குருவானவரால் ஆசீர்வதிக்கப்பட்ட இருப்புச் சங்கிலியைத் தரிப்பித்தார்.

### சரீர தண்டனை

தல்போத்து நாள்தோறும் செய்து வந்த ஒறுத்தல்கள் ஒருபுறம் என்றால், தமது கடும் சரீரப்பிரயாசையுள்ள தொழிலிலே அவர் இன்னும் எத்தனையோ தற்பரித்தியாகங்களைச் செய்யவேண்டியவரானார். அவரது சீவியத்தின் பெரும்பாகம் விடிந்து எட்டுமணி துவங்கி பொழுதுபட ஆறுமணி வரையும் மரவியாபாரக்காலையிலே செலவழிந்தது. இந் நெடிய, அலுப்பான பணிவிடையை வரையறைவாயும் சுத்த கருத்துடனும் செய்ததினால் அவருக்கு எவ்வளவோ தவப்பலன் விளைவதாயிற்று. ஒருவன் எவ்வித எளிய வேலையைத்தானும் கூடியளவு திறமாயும் தேவநேசத்தின் பொருட்டும் செய்வானேயாகில் அவன் பரிசுத்தனாகிறதற்கு அஃது ஒரு வழிவகை ஆகுமன்றோ! அவ்வாறே மரச்சாலையில் தல்போத்து புரிந்த தாழ்ந்த பணிவிடைகள் நற்கருத்தினால் மகிமை பெற்று, அவரது ஆத்துமத்தின் கெம்பீர புனிதத்தை அத்தாட்சிப்படுத்தின. அங்கே ஞான சீவியத்துக்குத் தூண்டுகோலாய் உள்ள உதவிகள் கிடையாதிருந்தும், ஒருவர் தம்மைப் பரித்தியாக மாக்குவதிலே கொண்டிருந்த தளராத ஊக்கத்தைப் பரிசோதிப்பதற்குப் போதிய எதிரிடைகள் மலிந்திருந்தன.

005212

இப் பரிசுத்த தொழிலாளி தமது சரீரத்தை முற்றாகச் சிலுவையில் அறைந்து போடும்படியாகத் தமது உள்ளிந்திரியங்களை ஒறுத்து அடக்கத் துணிந்தார். தமது ஆன்ம ஆலயத்துள்ளே தம்மைப் படைத்தவருக்கு ஒரு ஞானச்சருவாங்க தகனபலியைச் செலுத்திவரும்பொருட்டு, தமது சரீரமாகிய மதில்களின் சாளரங்களாகிய நேத்திரங்களைக் கடுங்காவல் செய்து, தமது மனமானது ஒரு அந்தரங்கமான நித்திய யாகத்தை ஒப்புக்கொடுத்துவரச் செய்தார். தமது மன அமரிக்கையைக் காப்பாற்றுவதற்கே தினப்பத்திரிகைகளையும் விளம்பரங்கள் முதலியவைகளையும் பாராதுவிடுவார். உலகத்தில் நடக்கும் விசேட சம்பவங்களும் நிகழ்ந்து வெகு காலத்தின் பின்பே அவருக்குத் தெரியவரும்; ஒருபோதும் தெரியவராமல் இருந்தும்விடும். இவ்விதமே அவர், உண்மையில் உலகத்திலிருந்தும் இல்லாதவர்போலானார். "மிகவும் மதுரமான யேசுவே, என்னில் தீங்குள்ளதெதுவோ அதை அடக்கியருளும்—அதை மடியச்செய்தருளும்" என்று அவர் செபித்துவந்த மன்றாட்டைச் சிலுவையிலறையுண்டநாதர் தயவாய்க் கேட்டவரானார். "உலகத்தாரால் மடையர்களென ஒதுக்கிவைக்கப்படுவோர்" என்று அவர் ஒரு இடத்திற் குறித்தபடி, தவத்தாளிகளின் அரசராகிய மானிடகோலரின் பலியெனும் மடைமையில் அவரும் நிறைவாய்ப் பங்கு பற்றுகிறவரானார்

தல்போத்துவின் உற்ற சிநேகிதர் ஒருவர் அவரது உளந்தடுமாறச்செய்யும் மனப்பலியின் பிரதான நோக்கத்தைக் குறித்து பின்வருமாறு சாட்சி கூறுகிறார்:—"தல்போத்துவுடைய சீவிய சரிதையை வாசித்தவர்கள், இவரைப்போலும் ஓர் எளிய மனுஷன் அவ்வளவு உயரமாய் இலக்குவைத்து அந்த இலக்குக்கு ஒப்ப நடந்ததைப்பற்றிப் பிரமிப்படைந்தார்கள். ஆயின், இவரது தெளிந்த நியாயமுறையான மனதைப்பார்த்தால், எவ்வித பிரமிப்புக்கும் இடமிராதென எனக்குத் தோன்றுகின்றது. தேவன் மானிடனானார், நம்மை மீட்டார் என்ற உண்மைச் சம்பவங்களை ஒருவர் நன்றாக உணர்ந்து கொள்ளும்போது, அப்பால் அந்த மானிட கோலரான கடவுளுக்கு தாம் செய்யும் ஊழியத்துக்கு ஒரு மட்டுத்திட்டம் வைக்கமாட்டார், இயலக்கூடியவைகளையெல்லாம் அவருக்காகச் செய்வார் அன்றோ! இப்படியான ஒரு அந்தரங்கமான உணர்ச்சியே தல்போத்துவைக் கடைப்பிடியாய்க் கடுந்தவம் புரியத் தூண்டிவிட்டதென்பது எனதபிப்பிராயம்" என்கிறார். இதுதான் தக்க நியாயம் என்று நாமும் ஒத்துக்கொள்ளுகிறோம். சிலுவையில் அறையுண்டவரின் அணைகடந்த அன்பும் பலியும் தல்போத்துவை ஆச்சரியவசத்தராக்கி விட்டன. அந்தத் தேவ அன்பு அவரது நியாயவழிதவறாத ஆன்மாவைக் கவர்ந்து, எமக்குத் தொண்டுபுரியவந்த நாதருக்குத் தாமும் தொண்டுசெய்து, தம்மை முற்றாய்ச் செலவழிக்குமட்டும் அவரைத் தூண்டிக்கொண்டிருந்தது. அவர் தவறாத நேர்மையுள்ளவரானதால் ஒருதரம் சிலுவை என்னும் இனிய நுகத்துக்குத் தோள்கொடுத்தவர், இனி அதைப் புரட்டியெறிந்துவிடக்



கூடாதவரானார். "யேசுவே, உமது திருவிலாவின் காயத்தில் என் கண்களும் என் இருதயமும் என்றும் படிந்திருப்பனவாக" என்று செபித்துவந்த பெரிய பச்சாத்தாபியான இவர், பாடுகளையே தேவனின் இருதயத்திற்கு நேரேசெல்லும் பாதையாகக் கண்டுகொண்டார். மாசின்மையே உருவான எம்பெருமானும் தாம் எங்கள் பேரிற்கொண்ட அன்பைத் தமது திருப்பாடுகளினாலேதான் காட்டியருளினார் அன்றோ!

## தவத்தாளிகள் பேரிற் பத்தி

தல்போத்து சிலுவையின் படிப்பினையைச் சரிவரக் கற்றுக்கொள்ளும்படி, பெரும் பாவிகளாயிருந்து பின்பு கடுந்தவசால் பரிசுத்தராகியவர்களின் சீவியத்தை நுட்பமாய் ஆராய்ந்து அறிய விரும்பியதும் இயல்பேயாம். இவர்களுள், அர்ச். மரியமதலேனாளும் எஜிப்து மரியம்மாளுமே அவர் மனதை அதிகமாய்க் கவர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் பச்சாத்தாப சீவியத்திற்காட்டிய ஓர்மத்தை அவர் மிகமெச்சிப்பேசுவார். இவர்களுடைய புதுத்தேவநேசத்தைப் பாராட்டும்போது இவர்களைப் "பெரிய பொடிச்சிகள்" என்று அழைப்பார். தவத்திற் பேர்போன இவ் இரண்டு சுத்தவாளிகளும் உன்னத மோட்சத்திலிருந்து தல்போத்துவுக்குப் பதிலுரைப்பார்களானால், இவர்கள் தாங்களும் அவரைப் "பெரிய பொடியன்" என உபசரித்துச் சொல்லுவார்கள் எனலாம். தமது பெரிய தவத்தன்மையையோ, தல்போத்து, என்றும் மறைத்து வருவார். அவருடைய பத்திக் கிருத்தியங்களெல்லாம் அந்தரங்கத்திலேதான் நடந்தன. இது ஐரிஷ்காரருக்குள்ளே பரவணியாய் உள்ள ஒரு ஒழுக்கம். உள்ளபடி, மறைவான பத்திக்கிருத்தியங்களால் மனப்பலி மேலும் மேலும் பேறுள்ளதாகும் அன்றோ? தல்போத்து தமது விலையுயர்ந்த இரத்தினங்களை மறைத்து வைத்திருந்ததினால், அவைகள் எவ்வளவுக்கு மறைத்து வைக்கப்பட்டனவோ அவ்வளவுக்கும் அதிக விலை ஏற்றம்பெற்றன. இவ்வித மறைவை அவர் எவ்வளவு பெரிதாக மதித்தார் என்றால், தமது இரகசியத்தை வெளிவிடுவதிலும் பார்க்கத் தவச்சங்கிலிகளைக் கழற்றிவைத்துவிட உடன்பட்டார். ஆகையினாற்றான் வைத்தியசாலையில் இருக்குமட்டும் அச்சங்கிலிகளை நீக்கிவிட நேர்ந்தது. சடுதியாய் அவர் மரித்தபோதே சங்கிலிகள் சரீரத்தில் காணப்பட்டன. அவரோடுகூட ஊடாடிய உற்ற சிநேகிதர்களும் அப்போதுதான் அந்த வேதனைக் கருவிகளைப்பற்றி அறிந்து ஆச்சரியப்பட்டார்கள்.

திருச்சபையின் தீர்ப்புக்குமுன் நாம் ஒன்றும் நிச்சயித்துச் சொல்லாமலும், அந்தத் தீர்ப்புக்குப் பூரணகீழ்ப்படிதலுடனும் இங்கு குறிக்கத்தக்கது என்னவானால், மத் தல்போத்து சுமந்து சென்ற சிலுவையை நாம் பார்க்கும்போது, அவரது தற்பரித்தியாகம் ஒன்றே, அவர் சாங்கோபாங்கத்தின் உச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்படியை அடைந்திருந்தார் என்று காட்டுவதற்குப் போதியதாகும் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அதிசயமான தவக்கிருத்தியங்களோடு அனுதின கடமைகளாகிய சிறுச் சிறுச் சிலுவைகளையும் அன்போடு தழுவிக்கொண்டு அந்தரங்க ஞானச் சீவியத்தை நடத்திவந்த ஒருவருடைய பரிசுத்தம் மெய்யாகவே வீரபராக்கிரமம் பொருந்தியதே. இவ்வீரபராக்கிரமத்தைக் காண்பது எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும் ஊக்கம் கொடுப்பதாயும், கஷ்டகாலங்களில் கிறீஸ்தவ திடதைரியத்துக்கு ஊற்றாகவும் இருக்குமென நம்புகிறோம். படியாத, கலைத்தேர்ச்சியில்லாத இந்த மனுஷன் இவ்வளவு உன்னத சாங்கோபாங்க நெறியில் பிரவேசித்திருக்க, நாம் அவரைப் பின்பற்ற இயலாது என்று சும்மா இருப்போமோ? பெலவான்களை வெட்கவைப்பதற்குச் சருவேசுரன் பெலவீனர்களைத் தெரிந்தெடுக்கிறானன்றோ! மத் தல்போத்து செய்த தவக்கிருத்தியங்கள் மகத்தானவைகளே என்றாலும், நம்மிடத்தில் நமக்கு ஏற்ற தவப்பற்றாவது இருக்கவேண்டியது அன்றோ? ஆகையால் நாமும்

ஆங்காலம் புண்ணியத்தை ஆசையுற்றுச் செய்யாமல்
சாங்காலம் செய்ய ஒரு சாமர்த்தியம் உளதோ?

என்று தூத்துக்குடி அந்தோனிக்குட்டி அண்ணாவியார் பாடிய உண்மையை நன்றாக உணர்ந்துகொண்டு, நம்மால் இயன்ற தவக்கிருத்தியங்களைச் சுகமும் பெலமும் உள்ளபோதே செய்யக்கடவோம்.

---

# இரண்டாம் அதிகாரம்

---

## கிறீஸ்தவ தொழிலாளி

நசரேத்துவாசரான தேவதொழிலாளி இப்பூவுலகில்வந்து சஞ்சரிக்கத் திருவுளமான காலம் மட்டும் கைத்தொழிலானது அடிமைகளின் சுதந்தரமென்றும், சபை சந்தியால் தள்ளுண்டோரின் நிலைபரமென்றும் எண்ணப்பட்டுவந்தது. யேசுநாதர் மனுமக்கள் மத்தியில் தோற்றி ஓர் தச்சனுடன் கைத்தொழில் செய்ததினால் தொழிலாளிகளை எல்லாம் மகிமைப்படுத்தியருளினார். அவரது திருச்சபையும் பொதுமக்களால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களைக் கனப்படுத்த அநேக நூற்றாண்டுகளாய்ப் பிரயாசப்பட்டுவருகின்றது; அடிமையைச் சிறையில் நின்று மீட்கவும் தொழிலாளியின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவும் முயலுகின்றது. தற்காலத்தில் வேலையாட்களுக்கு எதிராய் எழுந்திருக்கும் அநீத முதற்காரரையும், அதிலும் கொடிய சமதர்மம் என்னும் பொது உடைமைக்காரரையும் அது எதிர்த்துப் போர் பொருதுகின்றது. முதற்காரர் தங்கள் முதலைக்கொண்டு அளவுக்கு மேலான



லாபம் பெற்றுக்கொள்ளும்படி தொழிலாளிக்கு கடும்வேலை கொடுத்தும், அதற்குப் போதிய சம்பளம் கொடாமலும் அநீதி விளைப்பார்கள். பொது உடைமைக்காரர் சகல ஆஸ்திகளும் பொருட்களும் எல்லா மனுஷருக்கும் பொதுவாகச் சேரவேண்டுமென்றும், ஐசுவரியவான்களின் ஆஸ்திபாஸ்திகள் பொதுச் சனத்துக்கு உரியதென்றும் கொள்வார்கள். நம்முடைய தேசத்திலும் பொது உடைமைக் கட்சியார் தங்கள் அநீத கொள்கைகளைப் பரப்ப முயலுகிறார்கள். இவர்களுடைய கொள்கைகள் அநீதம் என்கிறோம். நீதமான பொது உடைமைக் கொள்கையும் உண்டு. ஆதித் திருச்சபையில் யெருசலேம் சபையார் தங்கள் சொத்து உடைமைகளை விற்றுப் பொதுநிதி அமைத்து, எல்லாரும் ஒன்று கூடிச் சமமாய்ச் சீவித்தார்கள். அப் பொது உடைமைச் சீவியமோ சுயாதீனமாய் நடத்தப்பட்டது, இப்போதும் கத்தோலிக்க சன்னியாச மடங்களில் இவ்வித சீவியத்தைக் காணலாம். யாழ்ப்பாணத்திலே தோலகட்டியில் விளங்குகின்ற செபமாலைத்தாசர் சபை இதற்கு ஒரு நல்ல உதாரணம். தற்கால பொதுஉடைமைக் கட்சியாரோ மற்றவர்களின் ஆதனங்களை வலோற்காரமாய் அடித்துப் பறித்து தங்களில் சில பேருக்குக் கொடுத்துப் பெரும்பாலாரைத் தங்கள் அரசாட்சிக்கு அடிமைகள் ஆக்குகின்றனர். இம்மட்டோ! கடவுள் இல்லையென்றும், மறு உலகில் மோட்ச சம்பாவனை கிடையாதென்றும், இவ்வுலகிலேயே சகல சந்தோஷத்தையும் அனுபவிக்க வேணுமென்றும் துர்ப்போதனை செய்கிறார்கள். நரக சர்ப்பத்தின் இப் பொய்ப் படிப்பினையைக் கிறீஸ்தவன் எவனும் ஒத்துக்கொள்ளான். மத் தல்போத்துவின் சீவியம் இதற்கு ஓர் உத்தம அத்தாட்சியாம். பொது உடைமைக் கட்சியாரின் கொடிய கொள்கை எனும் கொள்ளைநோய் பரவவிடாது தடுப்பதற்கு இத் தொழிலாளியின் முன்மாதிரி ஓர் கைகண்ட ஔஷதம் ஆகும்.

பன்னிரண்டாம் பிராயத்தில்தானே தல்போத்து கூலியென்றால் என்னவென்று அறிந்து கொள்ளலானார். அப்போது அவருக்குக் கல்விப்பயிற்சி மிகச் சொற்பமே என்றாலும், கிறீஸ்து வேதத்தில் அவருக்கு இருந்த தெளிந்த தேர்ச்சி அவர் தொழில் விஷயத்தில் அநேக வருடங்களாய் அதிக நேர்மையுடன் நடக்கச் செய்வதற்குப் போதுமாயிருந்தது. கற்சிற்பனுக்கு வேலை ஆளாய் இருந்த நாட்களிலே, அவர் குடிவெறிக்கு எவ்வளவிலே அடிமையாய்ப் போயிருந்தாலும், தமது கடமைகள் மட்டில் வெகு சாக்கிரதையாயிருந்ததை அறிந்த சகலரும் அதிசயப்பட்டார்கள். ஓர் எசமானுக்கு ஊழியன் செலுத்தவேண்டிய கடமைகளைப்பற்றிய கிறீஸ்தவ உணர்ச்சி அவர் மனதில் மிக ஆழமாய் ஊன்றிப் பதிந்திருந்தபடியால், குடிகாரருக்கு வழக்கமாய் உண்டாகும் சோம்பல் மந்தக்குணம் ஆதியவற்றிற்கு அவர் இடம் கொடுக்கவில்லை. வாலப்பிராயத்திலே, ஆடவப்பருவத்தின் ஆதிநாட்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லே அவர் தம் வீண் நேரங்களை குடி வெறியில்கழித்துக் கவலையற்றுத்திரிந்த காலையிலும், தமது தொழிலைக் கவனமாய்ப் பார்த்துவந்தமை விசேஷ வியப்புக்குரியதாகும்.

## தவறாத நேர்மை

மனந்திரும்பிக் கொஞ்சவருஷங்களின் பின் அவரது நிதார்த்தத்தைக் கடினமாய்ப் பரீட்சிக்கத்தக்க காரியப்பொறுப்பு அவருக்கு அதிகரித்தது. அவர் மரப்பண்டகசாலைக்குத் தலையாய் நியமனம் பெற்று, விசேஷ கேள்விப் படியும் தச்சுவேலைக்கும் மரம் தெரிந்துகொடுக்கும் வேலையில் அமர்ந்தார். இந்த நிலைபரத்துக்கு நுட்பமான நேர்மை வேண்டியது. ஏனெனில், மர வியாபாரத்தில் சிறு களவுகள் செய்யக்கூடிய பல தருணங்கள் வந்து வாய்க்கும். தல்போத்து இந்த அலுவலில் பூரண நேர்மைகாட்டிக் கழிவுத்துண்டுகளைத் தானும் உபகாரமாய் எடுத்துக்கொள்ளார். முழுதும் மனச்சாட்சியின் படியே நடப்பார். சாதாரண மனுஷர் சிறுகாரியங்களில் அநேக தடவை தவறுவதுண்டு. அவரோ அற்பகாரியங்களிலும் பலவருஷங்களாய்ப் பூரண நிதார்த்தங்காட்டி வந்தபடியால் அந்தப் புண்ணியத்திலே முழுதும் சாங்கோபாங்கம் அடைந்தார். சாமானியர்கள் இவ்வித அற்பகாரியங்களில் காட்டும் இளக்காரம் அவர்களது நேர்மைக் குறைவுக்குச் சாட்சியாவதுபோல, தல்போத்துவின் குன்றாத நிதானம் அவரது நேர்மையின் உன்னத நிலைக்கு அத்தாட்சியாகின்றது. நல்ல தொழிலாளிக்கு அலங்காரம் காலக்கிரமம் தவறாமலிருத்தல். அதுவும் தல்போத்துவின் சற்குணங்களுள் ஒன்றாயிற்று. குடி வெறியின் தாசிகத்தில் இருந்த காலத்திலும், அவர் ஒருபோதும் வேலைத் தலத்திற்கு நேரம்பிந்திச் சென்றதில்லை. நேரம் தவறும் சோம்பேறித் தொழிலாளிகளின் தந்திரமான நாணயக்கேடுகளைக் கண்டுபோலும், நேர்மையைப் பிடிவாதமாகக் கொண்ட அவர், இவ்விஷயத்தில் அதிக கவனஞ்செலுத்தலானார். தமக்குக் கிடைத்த சம்பளத்திற்குப் பூரணமாய்ப் போதிய வேலை செய்துபோட வேணுமென்றது அவருடைய ஒரு நிர்ணயம். சிலசமயங்களில் வேலைநேரத்துக்குமேல் அதிகமாய்ப் பிரயாசப்பட நேர்ந்தால், அதற்கு மேல்மிச்ச சம்பளம் வாங்க மறுத்துவிடுவார். தாம் பலமுறையும் சாமான் ஏற்ற லொறி வண்டிகள் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் வேலையின்றிச் சும்மாவிருக்க நேரிடுகிறபடியால், வழமையாய்க் கிடைக்கும் சம்பளம் தமக்குப் போதுமென்றும், மேல்மிச்ச உபகாரச் சம்பளம் தேவையில்லையென்றும் உறுதியாக மறுத்து நிற்பார்.

அவர் எப்போதும் "செய்வன திருந்தச்செய்" எனும் நீதிமொழிக்கிணங்கவும் நடந்தார். அவருடைய வழக்கமான குறுக்கடிப்பேச்சு அவரது ஆத்துமத்தின் யதார்த்தத்தைக் காட்டியதுபோல, அவருடைய செய்கைகள்



சகலமும் செய்வன திருந்தச் செய்யும் உணர்ச்சியை விளக்கின. மதுமயக்கத்தினால் பீடிக்கப்பட்டிருந்த காலத்திலும் வெள்ளென எழுந்து சென்று ஆறுமணிக்கு வேலை ஆரம்பிப்பார். உடை நடையில் கவனமற்ற சோம்புத்தனமான தோற்றத்தை நீக்கி, கடமை பார்க்கும் சிந்தையையே மேற்கொண்டு, சொன்ன சொற்படியே காலத்தின் கஷ்டத்தைப் பாராமல் காலை துவங்கி மாலை மட்டும் காரியக் கெட்டியாய் அலுவல் முடிப்பார்.

தொழிலாளி தன் கடமையைப் பிரமாணிக்கத்துடன் பார்க்கவேணுமென்று அவர் எவ்வளவு விசுவசித்தாரோ அவ்வளவு திடத்துடன் தாம் செய்தவேலைக்குத் தக்க சம்பளம் பெறவேண்டுமென்றும் பிடிவாதமாய் நிற்பார். இவ்விஷயத்தில் எதுசரியென்று எண்ணினாரோ அதைத் தமக்கு இயல்பான குறுக்கடிப்பேச்சிலே நிஷ்கபடமாய் விளக்கி விடுவார். வேலைகாரரின் சுதந்தரங்களைக் காப்பாற்றுதல் அவசியம் என்று ஒருபக்கத்தில் நிச்சயித்துக்கொண்டு, மறுபக்கத்தில் முதலாளிமாரின் கட்டளைக்கு எதிராய்ச் சில வேளை அடக்கமின்றி யாதொன்றைச் சொல்லிப்போட நேர்ந்தால், அதற்கு மன்னிப்புக்கேளாமல் ஒருபோதும் விடார். தமது நீதியான கேள்விகளுக்கு அனுகூலமற்ற விடைகிடைத்தால் ஞானிகளைப்போல மவுனம் சாதித்து அந்த அநீதியைத் தாங்கிக்கொள்ளுவார். சாதாரண மனிதர்கள் தங்கள் எண்ணம் பலியாவிட்டால் கோபங்கொண்டு கலகம் விளைப்பார்கள். தல்போத்துவோ அவ்வித சந்தர்ப்பங்களில் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தைத் தாழ்மையுடன் அனுசரிப்பார்.

## கூலிக்குழப்பங்கள்

அவரது தன்னடக்கமும் பரசிநேகபாவமும் தற்கால தொழிலாளிகளுக்கு இருந்தால் இவர்களுக்கும் முதற்காரருக்கும் இடையில் நேரிடும் சச்சரவுகள் எவ்வளவு குறைந்துவிடும்! ஒரு பகுதியாருக்குத் தங்கள் உரிமையைச் சாதிப்பது எவ்வளவு நீதியாய் தோன்றினாலும் அதை கிறீஸ்தவ இரக்கத்தினால் மட்டுப்படுத்திக்கொண்டால், எத்தனை கூலிக்குழப்பங்கள் தொடக்கத்திலேயே சமனாகிவிடும். தல்போத்து முதற்காரருக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட வித்தியாசங்களிலே தமது உடன் தொழிலாளர் பக்கமாய் பூரண அனுதாபங் காட்டியபோதிலும், காரியம் நடத்துவதிலே விமரிசையைக் கைவிடார். அவர் மிக்கசாதுரியமும் சாதனைக்கடுத்த அறிவும் உடையவராகவே, பொருளாதார விஷயங்களில் தமது அறிவுக்கு மேற்பட்ட யாதொன்றைப்பற்றிப் பேசும்போது மட்டுக்குமிஞ்சிய அபிமானம் காட்டாதபடி சாக்கிரதையாய் இருப்பார். எடுத்துக்கொண்ட காரியத்துக்குப் பங்கம் விளைக்கக்கூடிய சின்னஞ்சிறு திறைகளைத்தானும் பென்னம்பெரிய கவனத்துடன் விலக்கிவிடுவார். 1913-ம் வருடம் டபிளினில் நேரிட்ட வேலை

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
" THODARBAHAM "
7/1, HOSPITAL RO[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தமானது அவரது காரியபாக அறிவு எவ்வளவு என்றதைக் காட்டிற்று. கூலிக்குழப்பத்தினால் அந்த நகரிலே உள்ள தொழிலாளிகள் சகலரும் ஒன்றுபட்டுத் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு எல்லாரும் ஒரே தடவையில் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். தல்போத்து இவ்விஷயத்தில் ஏற்பட்ட சிக்குகளைத் தம்மால் அவிழ்க்கமுடியாதென்று உணர்ந்து, தம்மிலும் பார்க்க விவேகத்தில் தேர்ந்தவர்களே காரியத்தை ஒழுங்காக்க வேணுமென்று தீர்மானித்தார். சில காத்திரமான தருணங்களில் இப்படி வேலை நிறுத்தம் செய்யும் உரிமை தொழிலாளிகளுக்குண்டு என்று அவர் ஒத்துக்கொண்டாலும், தொழிலாளிகள் கேட்பவைகள் எல்லாம் நீதியென்றும், தங்கள் எடுப்பை அனுகூலமாக்க அவர்கள் கையாடும் வழிவகைகள் எல்லாம் சரியென்றும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆதலால் கூலிக்குழப்பக்காரருடைய முயற்சியிலே தாம் கலந்து கொள்ளாமல் தூரத்தில் நின்றதுமன்றி, பிறரை நெருக்கிடைபண்ணக்கூடிய முயற்சியில் கையிடவுமில்லை. வேலை நிறுத்தம் எனும் ஆயுதம் சில தடவைகளில் தொழிலாளிகள் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏற்ற கருவியே என்றதை அவர் ஒப்புக்கொண்டாலும், அதின் பேரால் நடத்தும் அநியாயங்களைத் துவேஷித்தார். உதாரணமாக, வேலையைவிட்டு நின்றவர்களினிடமாய் மறுபேர்போய்ப்பிழைக்கத் தடைசெய்தல் தகாதென்றும், அப்படித் தடுப்பவர்கள் போதிய சம்பளம் கொடாத முதற்காரரைப் பார்க்கிலும் தொழிலாளிக்கு அதிக துரோகஞ்செய்வோர் என்றும் உணர்ந்தார். தனக்கு நீதிகிடைக்க வேணுமென்று கேட்பவன் மற்றவர்களுக்கு அநீதிசெய்யக்கூடாதென்பதே அவர் கொள்கை.

தல்போத்து தொழிலாளிகளுடைய நயங்கருதிப் பலமுறை போராடிய போதிலும், அதிகாரிகள் மட்டிலோ மெய்யான கிறீஸ்தவ சங்கை மரியாதை காட்டிவந்தார். வேலை நிறுத்தஞ்செய்வது சரியோ என்றதை நன்றாய் ஆராயும் பொருட்டுத் திருச்சபையின் அனுமதியுடன் அச்சிட்டு வெளியிடப்பட்ட புஸ்தகமொன்றை வாசித்துப்பார்த்தார். அதில் சீவனத்திற்குப் போதாத சம்பளம் கிடைக்கும்போது வறிய தொழிலாளிகள் முதற்காரருக்கு எதிர் உரைக்க உரித்துண்டு என்று வாசித்தறிந்து, தாம் இதுவரையில் நடந்து கொண்டவிதம் சரியே என்று உணர்ந்தார். என்றாலும், அவர் வேலை நிறுத்தத்தை அங்கீகரித்தது தமக்காகவல்ல, மற்றவர்களுக்காகவே. அவரோ தன்னய மறுப்பில் நன்கு தேர்ச்சி அடைந்தவர். அவருக்கு தமது சம்பளம் மெத்திப்போயிற்று என்றதுபோல் இருந்தது. ஆனால் மற்றவர்கள் தம்மைப்போல் ஒறுத்து நடக்க இயலாதவர்களென்று கண்டே பிறசிநேகத்தின் நிமித்தம் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினார். தம்மைப்பார்க்கிலும் வறியோர்க்கு தமது சொற்ப சம்பளத்திலிருந்து பலமுறை உதவியவர், அயலானின் அன்பினாலேயே வேலை நிறுத்த அலுவலில் தம்நயங்கருதாது பங்குபற்றினாரென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. மற்றைய தொழி



லாளர் அவரது கிறீஸ்தவ திடனையும், திருச்சபை அதிகாரிகளுக்கும் தேச அதிகாரிகளுக்கும் அவர் காட்டிவந்த கீழ்ப்படிவையும் பார்த்து, அவரை வெகு மரியாதையுடன் உபசரித்தார்கள். வேலை நிறுத்த நாட்களுக்குக் கிடைக்கும் சம்பளத்தை அவர் தமக்குத் தேவையில்லையென்று கேளாமல் விட்டாலும், மற்றவர்கள் அவருக்கும் அச்சம்பளத்தை உதார குணத்துடன் கொடுத்தார்கள்.

## முதற் கத்தோலிக்கன்—பிறகு தொழிலாளி

நம் நாட்டுத் தொழிலாளிகள் தல்போத்துவின் சுகிர்தநெறியை வெகு தூரத்தில் நின்றே பின்பற்றக் கூடியவர்களாயிருந்தாலும், அஞ்ஞானத்தை விடக் கேடுள்ளதாகிய பொது உடைமைக்கட்சியின் கொள்கைகளை எல்லாரும் எதிர்த்து கிறீஸ்தவ ஞானத்தோடும் திடனோடும் போராடத் துணிய வேண்டியவர்களேயாம். பொதுச்சன சமூகத்துக்குரிய நீதியே தங்களுக்கு அவசியமென்றும், தாறுமாறான சமதர்மக் கொள்கைகள் இல்வாழ்க்கைக் கிரமத்தை சீர்குலைத்து விடுமென்றும் அவர்கள் அறியக்கடவார்கள். ஊர்க் கலகத்தால் தேசத்தைச் சீர்ப்படுத்தலாமென்று எண்ணுவது நீதிக்கும்மாறு; நியாயத்துக்கும்மாறு.

தொழிலாளியாய் உருவெடுத்து வந்த கிறீஸ்துநாதர் தம் கைத்தாதைக்குப் பணிந்து நடந்ததையும், அத்தால் மனுக்குலத்திற்குப் படிப்பித்த போதனையையும் நினைவு கூராதவன் கிறீஸ்தவ நீதிநெறியைப் புரட்டிவிடும் ஒரு முறையைக் கைக்கொள்ளுகிறான்; தன் முயற்சிகளுக்குத் தன்னைத்தானே ஏக முடிவாக ஏற்படுத்துகிறான். இப்படியே கடவுளைக் கைவிட்டு, அகம்பிரமத்தால் தன்னையே தனக்கு ஆதியும் அந்தமும் ஆக்கி, சொற்பகால இன்பத்திற்காக ஆத்துமத்தை அழிக்கும் உலோகாயதத்தில் சிக்குண்டு மாய்கிறான்.

மத் தல்போத்து வேலை நிறுத்த நாட்களில் மாத்திரமல்ல மற்றச் சாதாரண நாட்களிலும் தாம் முதன் முதற் கத்தோலிக்கனும் அதன்பின்னே ஒரு தொழிலாளியும் என்று காட்டி வந்தார். தமது தொழில் ஆதாயத்தைப் பார்க்கிலும் ஆத்தும லாபத்தையே விரும்பினார். தாம் அமர்ந்திருந்த வேலைத்தலத்திலே ஒவ்வொரு காலையிலும் திவ்விய பூசைகாண நேரம் வசதிப்படாமையால், அவ்வாராதனை நேரத்தின்பின் வேலை துவங்கும் வேறொரு தொழிற்சாலைக்குப்போனார். பூசைப்பலியிற் பங்குபற்றுவதே அந்தந்த நாளைக் கடவுளுக்கு உரியதாக்கி தமக்கு வேண்டிய சகல ஆசீர்வாதங்களையும் ஏராளமாய் பெற்றுக்கொள்ளுவதற்கு உத்தம வழி என்றது அவருடைய தீர்ப்பான கொள்கை. இப்படியே, தமது பக்திக் கிருத்தியங்களை லௌகீக முயற்சிகளுக்கு மேலாகவைத்து, தமது தொழிலைத்தானும் செபத்தினால் சுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகரித்துவருவார். சுத்த கருத்தும் தேவ சந்நிதான ஞாபகமும் வேலைத் தலத்திலும் அவரைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கும். "கன்னிமாதாவே உம்மிடம் மூன்று வரங்களைக் கேட்கிறேன். தேவ வரப்பிரசாதம், தேவ சந்நிதான நினைவு, தேவ ஆசீர்வாதம் எனும் இவைகள் தாம் எனக்கு வேண்டும்" என்று செபிப்பார். தமது தொழிலில் அவர் காட்டிய கிறீஸ்தவ தன்மையும் அந்தக் கிறீஸ்தவ தன்மையில் விளங்கிய காரியக்கெட்டித்தனமும் அவரது செபம் கேட்கப்பட்டது என்றதற்குப் போதிய அத்தாட்சியாயின.

## மூன்றாம் அதிகாரம்

### தல்போத்துவின் சற்பிரசாதப்பத்தி

அயர்லாந்து தேசத்தார் தாங்கள் சமாதானமாய் வாழ்ந்து கொண்டு வந்த நாட்களில் மாத்திரமல்ல, வேதத்துக்காகப் பாடுபட நேர்ந்த நாட்களிலும் தேவநற்கருணைப் பத்தியை இடைவிடாத ஊக்கத்துடன் அனுசரித்து வருவார்கள். பூசைப்பலியை ஆசையுடன் கண்டுவருபவன், பாவ வழியில் நடந்து கெட்டாலும், ஒருநாள் தேவகிருபையால் மனந்திரும்புவான் என்றது ஐரிஷ்காரருட் காணப்படும் ஒரு நம்பிக்கை. பூசைக்குப் போகாதவர்களுடைய இரட்சணியம் சந்தேகத்துக்குரியது என்றதும் அவர்களுடைய அபிப்பிராயம். இது மத் தல்போத்துவின் சீவியத்திலே நன்றாகக் காணப்படுகிறது. அவர் மதுமயக்கத்தால் நெடுங்காலம் கிறீஸ்தவ ஒழுக்கத்துக்கு மாறாக நடந்து வந்தபோதிலும், தமது தேசத்தாருக்கு இயல்பாயிருந்த தேவநற்கருணைப்பத்தியைக் கைவிடாமல் திவ்விய பூசை கண்டு வந்ததினால் ஈடேறலானார். மனுமக்கள்மேல் வைத்த மாறாத அன்பினால் நாள் தோறும் நமது பீடங்களிற் பலியாகி நம்மோடு திவ்விய சற்பிரசாதத்தில் எழுந்தருளியிருக்கச் சித்தமானவருடைய இரக்கத்தினால் பாவத்தின்மேற் செயங்கொண்டவர்களுள் மத் தல்போத்து இக்காலம் விசேஷித்தவராய் விளங்குகிறார். ஆண்டவர் கிருபையால் அவர் அடைந்து கொண்ட செயம் கத்தோலிக்க உலகம் முழுதினுக்கும் ஆறுதலை, ஆனந்தத்தை, மனப் பூரிப்பை அளிப்பதாகிறது

தல்போத்து பன்னிரண்டாம் பிராயத்தில்தானே தமது தொழிலில் உண்டான பாவச்சமயங்களிற் சிக்குண்டு தமது இருபத்தோராம் வயதுமட்டும் மதுவெறித் தாசிகத்தில் உழன்று வந்தார் என்றோம். அந்த நிர்ப்பாக்கியமான காலமெல்லாம் அவர் தவறாது பூசை காண்பதைத்தவிர ஆன்ம லாபத்திற்குரிய வேறொன்றையும் செய்யவில்லை. முதன் முதல் தமது விசுவாசத்தினாலும்—பின்பு ஒருவேளை தம் ஊரவர்களால் புறக்கணிக்கப்படாதிருக்கும் பொருட்டும் ஆகலாம்—அவர் திவ்விய பலியை ஞாயிறுவாரந்தோறும் ஊக்கமாய்க் கண்டுவந்தார். ஓர்நாள் தற்செயலாய் நடந்த சம்பவத்தாலோ அவர்



குடிவகை விற்கும் இடங்களுக்குப் போவதை முற்றாக நிறுத்தி அப்பால் அந்தத் துர்ப்பழக்கத்தில் அகப்படாதபடிக்குச் சற்பிரசாதநாதர் வசித்தருளும் திருப்பேழையின் முன்னேயே அடைக்கலம்புகத் தொடங்கினார்.

தல்போத்து பத்தியோடு கண்டுவந்த திவ்விய பூசையே அவர் அடைந்த மேலான அர்ச்சியசிஷ்டதனத்துக்கு விசேஷ காரணமாயிற்று. குடி வெறியில் ஈடுபட்டுத் திரிந்த நாட்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூசை காணப்போகும் நிதானம் என்னும் நெருப்புப்பொறி, இப்போது, அவர் ஆத்துமத்தில் அக்கினிச் சுவாலையாய்ப் பற்றி எரியவே, துர்ப்பழக்கத்தால் உண்டான பாவச்சோதனைகள் பரிதிமுன் பனிபோல் பறந்துபோனதுமல்லாமல், அந்த நெருப்புச் சுவாலையின் அனலால் சாங்கோபாங்க வளர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்கிற்று. எழுந்துபோவதற்குக் கஷ்டமான அதிகாலையில், ஐந்து மணி நேரத்தில், அனுதினமும் அவரைப் பூசையிலே காணலாம். பகல் வேலை நேரம் முடிந்தவுடன் அவர் கோயிலிலே திருச் சற்பிரசாதத்தின்முன் நெடுங்காவல் காப்பதைக் காணலாம். சனிக்கிழமை பின்னேரமும் ஞாயிற்றுக்கிழமை முழுவதும், தொழிலில்லா நேரமாதலால், பலிபீடத்தின் முன்பாக அவரைக் காணலாம். ஆசாபாசங்களில்நின்று தம்மை விடுவித்துக்கொள்ளும்பொருட்டு, இப்படியே, அவர் சருவேசுரனுடைய கிருபாசனமாகிய சற்பிரசாத சன்னிதியில் போராடிக்கொண்டிருப்பார்.

### சன்ம சத்துருவோடு செய்த சமர்

தல்போத்து, சற்பிரசாதச் சந்திப்புக்கள் தமது சாங்கோபாங்க சீவியத்துக்கு அத்திவாரம் போலிருக்கிறதை உணர்ந்திருந்தார். ஆதலால் அந்தச் சந்திப்புக்களைச் செய்யாமல்விடப் பண்ணுவதெல்லாம் பிசாசின் மாயமே என்று எண்ணிக்கொண்டார். உள்ளபடியே, இரண்டு தருணங்களில் அதரிசனமான சத்தி ஒன்று அவரைத் திவ்விய பூசைக்குப் போகவிடாமல் தடுத்தது என்றும், அவர் தேவ நேசம் என்னும் வசியத்தால் அந்தத் தடையை வென்றார் என்றும் அறிகிறோம். அப்பால் பிசாசு வேறு உபாயமான தந்திரங்களால் அவரைப் பீடிக்கத் துவங்கிற்று. ஒருநாள் அது வெறிப்பானத்தின்மேல் முன்னொருபோதுமில்லாத தவனத்தைப் பிறப்பித்து, அதை விட்டுவிடுவது இயலாத கருமமென்று காட்டி, அவரைச் சற்பிரசாதம் பெறாதிருக்கப்பண்ணப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தது. அவரோ சர்ப்பத்தின் தலையதனைத் தாளால் மிதித்தவளை நம்பிக்கையோடு வேண்டிக்கொண்டதினால், அந்தப் பரமநாயகியின் திருச்சுதனானவரால் ஆறுதல் அடையப்பெற்றார். அன்று அவர் அவநம்பிக்கை என்னும் அந்தப் பயங்கர சோதனையைச் செயிக்க மூன்று மணித்தியாலம் சென்றது. அவருக்கு இதுவே அலகையோடு செய்த கடைசி அமர் ஆயிற்று. அப்பால் அலகை அவரை இவ்வித சோதனையால் உலைக்கத் துணியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, தல்போத்துவுக்கு நிலத்தை அகழ்ந்து அத்திவாரம் போடுவதல்ல, போட்ட அத்திவாரத்தின்மேற் கட்டுவதே வேலையாயிற்று. இனி, அவர் சற்பிரசாத நாதரோடு வெகுநேரம் சம்பாஷித்து ஆறுதலடைந்து சிந்தைமகிழ்வார். சற்பிரசாதச் சந்திப்பு அவருக்கு ஒரு சிநேகிதனைச் சந்திக்கப்போவது போலிருக்கும். "வழியில் ஆண்டவரையும் கண்டுகொண்டு போவோம்" என்று அவர் தேவநற்கருணையைச் சந்திக்கப்போகையில் சொல்வார். இந்த விதமான பேச்சு அன்பர்களில் அன்பரானவருடன் அவர் எவ்வளவு பழகியிருந்தார் என்றதைக் காட்டுகின்றது அல்லவா? இப்படியே ஆண்டவரும் அவரும் உற்ற சிநேகிதர்களாகத் தொடங்கினார்கள். இந்தச் சிநேக ஐக்கியத்தைப் பகிரங்கமாய் உறுதிப்படுத்தும் பொருட்டு, அவர், பிரான்சிஸ்க சபைத் தேவநற்கருணைக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு, திருப்பேழைகளில் வந்துறையச் சித்தமாகின்ற தேவ அன்பருக்கு அந்தரங்கத்திலே அதிக உறவு பூண்ட ஒரு அன்பரானார்.

## தேவ அன்பருக்கு உவந்த அன்பர்

ஓர் எளிய தொழிலாளியாகியவர் தம்மைப்போலத் தொழிலாளியாய் வந்தருளிய பரம நண்பரின் சமுகத்திலே அடைந்துகொண்ட ஆறுதல் பொருந்திய ஐக்கியம் எவ்வளவு என்றதைக் காட்டிய ஒரு சிறு சம்பவத்தை இங்கு எடுத்துச் சொல்லுவோம். திக்கற்ற மனுஷியொருத்தி தன் அருமைச் சகோதரன் தூர அமெரிக்க தேசத்திற்குச் சென்றதால் மனமடங்காத் துயருற்று, இவரைக் கண்டபோது, தன் தனிமையைப்பற்றித் துயரத்தோடு முறையிட்டாள். அதற்கு தல்போத்து "தனிமையாகச் சற்பிரசாதப் பேழையில் எங்கள் கர்த்தர் இருக்கையில் நீர் தனிமையைப்பற்றிச் சொல்வது எப்படி? அப்படிச் சொல்வது பேதமை" என்றார். இந்த வசனத்தால் அம்மனுஷிக்கு உடனே ஆறுதல் கிடைத்தது. வேறொருவரிடத்திலும் பெற்றுக்கொள்ள இயலாதிருந்த மனச்சமாதானத்தை அவரிடம் அடைந்து கொண்டாள். பேசொணா அன்பானவரின் சந்நிதானத்தினால் வரும் இனிமையை உணர்ந்த ஒருவர் மட்டும் தல்போத்து சொல்லிய வார்த்தைகளைச் சொல்லக்கூடும். உலக அன்புகளையெல்லாம் தேவ அன்புக்குக் கீழ்ப்படுத்தி, சற்பிரசாத நாதரின் தனிமையோடு தம்மை ஒன்றித்து, அவரோடு அன்னியோன்னியமாய்ப் பழகிய ஒருவரே உலக கூட்டாளித்தனங்களைவிட்டு தேவ ஐக்கியத்திலே ஆனந்தம் அனுபவிக்கக்கூடும்.

இந்த ஏழைத் தொழிலாளி திவ்விய கர்த்தரோடுகொண்ட அணைகடந்த சிநேகமானது அவர் தமது பேரிற்கொண்ட வெற்றியின் பயனாயிற்று. சரீரத்தை அசைப்பது மனத்தை ஒருவழிப்படுத்தித் தியானிப்பதற்குத் தடையென்று கண்டு, பூசைநேரத்தில் அசைவற்றிருந்து தியானிப்பார். உடல்



விறைத்ததினால்வரும் அலுப்பொன்றையும் உணராதவராய் தியான யோகத்தில் அமர்ந்திருப்பார். ஞாயிற்றுக்கிழமைகளில் எழு மணித்தியாலம் நெடுமுழந்தாளிலிருந்து கண்மூடியபடி அசைவின்றிப் பிரார்த்திப்பார். சரீர ஆயாசம் என்ற பெரும் தடையை வெல்லத்தக்கதாயிருந்த இந்தச்சத்தி அவருடைய உள்ளொடுக்கத்தினாலும் செபத்தில் வைத்த ஊக்கத்தினாலுமே அவருக்குக் கிடைத்ததாகவேண்டியது. தற்பரித்தியாகமே அவர் செபத்தியானத்தில் ஆனந்தத்தை அடைந்து மனப்பலியிலுண்டான கசப்பை இன்பமாக மாற்றிக்கொள்ளச் செய்தது.

## ஞான வாசிப்பு

தல்போத்து மனப்பலியோடுகூடிய நெடும்பயிற்சியினாலேதான் தியான யோக வரத்தை அடைந்தார் என்றபோதிலும், ஞான வாசிப்பும் அவர் தேவ நேசத்தில் அதிகரித்து தியான யோகத்தில் அதிகமாய் ஈடுபடச்செய்தது. படிப்பில் குறைந்த அவர் வாசித்த ஞான புத்தகங்களைப் பார்த்தால், அந்த மூன்று புத்தகங்கள் தாமும் அவருக்குப் பெரிய வாசிகசாலை ஆயின என்று சொல்லலாம். அவைகள் யேசுவின் தோமாஸ் சகோதரர் என்பவர் எழுதிய "யேசுக்கிறீஸ்து நாதரின் திருப்பாடுகள்" எனும் நூலும், ஏய்மார் சுவாமியாருடைய "சற்பிரசாத சன்னிதான உண்மை" எனும் நூலும், வேபர் சுவாமியார் இயற்றிய "திரு இரத்தம்" எனும் நூலுமேயாம். இவைகளை அவர் படிப்பாளிகள் கற்கிறமாதிரியாயல்ல, இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் அருளாலேயே படித்து உணர்ந்துகொண்டார். கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளையும், அவர் தமது அன்பின் மிகுதியால் மனுச்சந்ததிக்கு அருளிய சற்பிரசாதத்தையும், விலைமதிக்கொணாத திரு இரத்தத்தையும்பற்றி தல்போத்து தியானித்துத் தியானித்து, இந்த பரம உண்மைகளை அடக்கியிருக்கிற திவ்விய பூசையில் மேலும் மேலும் பத்திவைத்து அந்தப் பத்தியில் மேம்பட்டார் என்று சொல்லத்தக்கதாயிருக்கிறது. கர்த்தருடைய திருப்பாடுகளின் தியானந்தான் தல்போத்துவுடைய உச்சமான தேவ நேசத்துக்குக் காரணமாயிற்று. சிலுவையையே என்றும் நேசித்து அந்தச் சிலுவையில் தாமும் அறைபடும் வரையில் தவஞ்செய்த அவர், பூசையைக் காணும் முன்னும் சிலுவையின் அன்பினால் தவக்கிருத்தியங்களைச் செய்வார். அதிகாலையில் கோயிலண்டை சேர்ந்து, ஆலயக்கதவு திறபட்டவுடன் முழந்தாளில் இருந்து நிலத்தை முத்திசெய்வார். அதன்பின் சிலுவைப்பாதைசுற்றித் தம்முடைய கர்த்தரது திருப்பாடுகளின் ஞாபகத்தோடு பூசைகாண ஆயத்தம் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாழ்ச்சி நிறைந்த அன்பு

அவர் நாள்வட்டத்திலே எவ்வளவு கடினமாய் வேலை செய்யவேண்டியிருந்த போதிலும், ஏறக்குறைய நாற்பது வருடங்களாய், ஒவ்வொரு காலையும் ஐந்து அல்லது ஆறு மணிக்குப் பூசைகாணுமுன் இத்தவமுயற்சியிலே பிரமாணிக்கமுள்ளவராய் நடந்தார். தமது வெறும் முழந்தாள் தாம் முழந்தாளிலிருக்கும் இடத்திலுள்ள பலகையில் அண்டும்படி காற்சட்டையைக் கிழித்துவைத்துக்கொண்டு, கொடும் மரத்தில் கைகால் அறையுண்டு மரித்தவரின் திருப்பலியைக் கண்டு முடிப்பது அவருடை மாறாத வழக்கம். திருநாட்களிலே இப்படியே நெடுமுழந்தாளில் நின்று பல பூசைகள் காண்பார். இரண்டு திருநாட்களிலே தாம் இருபத்தொரு இருபத்தொரு பூசை கண்டதாக எடுத்துச் சொல்லுவார். அந்திய நாட்களில் அவர் வைத்தியசாலையில் நோய்வாய்ப் பட்டிருந்தபோதுதானும், பூசை காணவும் இரகசியமாய்த் தமது சற்பிரசாத அன்பரைச் சந்திக்கவும் தெண்டித்துவருவார். சிநேகிதருளெல்லாம் அரியவரான சற்பிரசாதநாதர் தமக்குச் செய்த பெருமுபகாரங்களுக்கு நன்றியறிதலாக, தாம் இருந்த வைத்தியசாலையிலுள்ள சிறுக்கோயிலுள் நுழுந்திச்சென்று, அகம்பூரித்து, வெகு நேரம் அன்னியோன்னியமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருப்பார். இதைக் கண்ணுற்ற ஓர் தாதி அவர் தமது வருத்தத்தைப் பாராமல் புத்தித் தாழ்ச்சியாய் நடந்துகொண்டதற்காக அவரைக் கடிந்தபோது, அவர் “வைத்தியர்களுக்கும் தாதிகளுக்கும் துதிகூறிவிட்டேன், இனிப் பெரிய வைத்தியருக்குத் துதிசொல்லுதல் சரியேயென எண்ணினேன்” என விடைபகர்ந்தனர். தேவரட்சகரானவர் இவ்வுலகத்தில் சஞ்சரித்தபோது எத்தனையோ பிணியாளருக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்தவிடத்தில், சொஸ்தமடைந்த சிலர் தமக்கு நன்றியறிதல் காட்டியதை உவந்துகொண்டார் அன்றோ! அந்தத் தேவ வைத்தியர் தல்போத்து தமக்குச் செலுத்திய நன்றியறிதலைக் கண்டு எவ்வளவு மனமுவந்திருப்பார் என்று சொல்லவேண்டியதில்லை.

தல்போத்து சற்பிரசாத நாதருடன் அன்னியோன்னியமாய்ச் சல்லாபித்து வந்தாலும், தாம் ஓர் பொல்லாப்பாவியென்றும், பரமனின் சிநேகத்துக்கும் பாத்திரன் அல்லவென்றும் உணர்ந்து மனத்தாழ்ச்சி மிகுந்தொழுகினர். வைத்தியசாலையில் அவர் நடந்துகொண்டவிதம் இதை நன்றாகக்காட்டுகிறது. அவர் வருத்தத்தின் தனிமையிலே தேவ விருந்தை அருந்த அதிக ஆவல் கொண்டிருந்தபோதிலும், வைத்தியசாலையிலே அப்பரம போசனத்தைத் தமக்குக் கொண்டுவந்து கொடுக்கும் விசேஷ சிலாக்கியத்தைத் தாமாகத் தேடவில்லை. ஆயன் மந்தையைத் தேடுவதுபோல தேவன் தம்மைத் தேடிவரக் காலம் நேரிடுமென விசுவசித்துக் காதலுடன் காத்திருந்தார். அவரது நம்பிக்கைக்குப் பிரதிபலனாய், வைத்தியசாலையைப் பராமரிப்போர், தேவாதீனத்



தால் தாங்களாகவே அதை நினைத்து, அவர் தமது தாழ்ச்சி மிகுதியினால் கேட்கத்துணியாத பரலோக அப்பத்தை அவர் பலமுறையும் அருந்தச் செய்தார்கள்.

சற்பிரசாதப் பத்தியினால் இவ் ஏழைத் தொழிலாளி பெற்ற அற்புத வரங்கள் எம்மட்டென்று நடுத்தீர்வை நாளிலேதான் அளவிடலாகும். ஒன்று மாத்திரம் இப்போது அறிவோம். கிறீஸ்து தேவராசா சற்பிரசாத கொலுவிலே வீற்றிருந்து ஏழைகளுக்கும் செல்வர்களுக்கும், கற்றாருக்கும் கல்லாதவர்களுக்கும் தமது அன்பின் கொடைகளை அளிக்கிறார். தல்போத்துவைப்போல் நாமும் திவ்விய சற்பிரசாதப் பத்தியினால் சாங்கோபாங்கத்திலே வளர்ந்து அர்ச்சியசிஷ்டர்களாகக்கூடும் என்றது உண்மை. இதற்கு எதிர்வாக்கில்லை.

---

## நாலாம் அதிகாரம்

---

### அன்பின் சுவிசேஷம்

தானாகச் சுரக்கிற அதி தூய்மையான அன்பு வஞ்சகமற்ற ஆத்துமங்களிலேயே உண்டாகும். இந்த அன்பை, குழந்தைகளின் மனதைக் கவருகிற கபடில்லாத நடக்கையிலே காணலாம். இவ்வித அன்பையே யேசுநாதரும் புகழுகிறவராய், குழந்தைகளைத் தம்மண்டை வரவழைத்து, தம் சீஷரைப் பார்த்து: இவர்களைப் போல வராதவர்கள் தேவ் இராச்சியத்திலே சேரமாட்டார்கள் என்று திருவுளம்பற்றினர். மத் தல்போத்து எனும் தொழிலாளியிடத்திலே காணப்பட்ட தேவ நேசமும் இப்படியே, பூவிலிருந்து இயல்பாக வெளிப்படும் சுகந்தத்தைப் போல, தானாகவே வெளிப்படுவதாயிற்று. அவருடைய தேவநேசம் உலகத்துக்குரிய கல்வியறிவு எனும் நஞ்சு கலவாததாய் ஊற்றெடுத்தது. அவருடைய இருதயத்தின் தூய்மையை உலக ஞானம் மாசுபடுத்தவில்லை. தாம் நேசித்தவரை அறிய அவர் படித்துக்கொண்டுவந்தபோது, வேறொரு படிப்பு அதைத் தூர்வழிப் படுத்தவில்லை. அந்த அறிவு தானே பூரண உண்மையாதலால், தல்போத்து அதைப் பேராவலோடு தேடினர். அந்த அறிவிலே அவர் வளரவளர, சகல அறிவினும் சம்பூரணமான தேவஞானம் கைவந்து, அன்பே ஆகிய அந்த மெய்ப்பொருளை அடைகிறவரானர்.

நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் ருசிக்கும்
நின்னைப் புகழும் வாயே நித்யாமிர்தம் புசிக்கும்
கனக்கும் நின் அடிகாணக் கண்கள் தினம்பசிக்கும்
கர்த்தனே உனைக் கண்டால் கவலையெலாம் நசிக்கும்

என வேதநாயகம்பிள்ளை பாடியவண்ணம் அன்பே உருவமாகிய இன்பப் பரப்பொருளிலே தமது ஏக நன்மையைக் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனந்திரும்புமுன்னும் மத் தல்போத்துவிலே இயல்பான ஒரு அன்பின் கிளர்ச்சி காணப்பட்டது. அக்கிளர்ச்சியோ தொடக்கத்தில் தீயவழிகளிற் சென்று விட்டது. ஆயின், ஒருநாள் காத்திராப் பிரகாரம் நடந்தவொரு சம்பவத்தினால் உலக சிநேகம் நிலையற்றதென்று அவர் உணர்ந்தவுடன், அந்த அன்பின் கிளர்ச்சி சகல அன்புக்கும் ஊற்றானவரையே நோக்கத்தொடங்கிவிட்டது. அதெப்படியெனில் ஒருநாள் அவர் மதுவருந்தக் கையில் அரைக்காசுமின்றி, கடன்வாங்க வழியுமின்றி, ஒரு தெருச்சந்தியில் தம்மோடு கூடிக்குடிப்போரைக் காத்துநின்றார். அவர்கள் அவரை அறியாதார்போல் அருகால் சென்று குடிக்கப்போனார்கள். தம்மிடம் காசில்லையென்றும், அந்த வீதியில் ஏன் காத்துநின்றதென்றும் அவர்களுக்கு நல்லாய்த் தெரிந்தும், தம்மைக் கூப்பிடாமல் சென்றது அவருக்குக் காதில் நாராசம் பாய்ச்சியதுபோலிருந்தது. மனிதசிநேகம் நிலையற்றதென்றது, அந்நேரம், இயல்பாகவே அன்பின் கிளர்ச்சியுள்ள அவருக்குத் தெற்றென வெளிப்பட்டது. இனி, ஒருபோதும் மாறாத, நிலையுள்ள ஒரு அன்பரைத் தேடத் துணிந்தார். தமது தவறான சிநேகிதங்களுக்கு ஏதுவாயிருந்த மதுபானத்துக்கு உடனேதானே பிரியாவிடைகூறினார். கள்ளச் சிநேகிதர்கள் கைவிட்டதினால் அவருக்கு உண்டான தேவவெளிச்சத்தைக்கொண்டு உண்மையான சிநேகிதர் ஒருவரைக் கண்டடைந்தார். இனி, அவர், அந்தப் பரமசிநேகிதருக்கே ஆளாய்ப்போய்விடுவார். இனி, அவருடைய திருச்சன்னிதியையே மனதினால் தமது தவமடமாக்கிக்கொள்ளுவார். இனி, பிறர்சிநேகக் கிருத்தியங்களுக்காக வெளியுலகத்தோடே ஊடாடவேண்டி வந்தாலொழிய, தமது மனமாகிய தவமடத்தைவிட்டு வெளிக்கொள்ளமாட்டார். சகல அன்புக்கும் ஊற்றாகிய யேசுவின் திவ்விய இருதயத்திலேயே அவர் உண்மையான, மாறாத அன்பைக் கண்டுகொண்டார். செபமே அத் திரு ஊற்றினுக்குச் செல்லும் வழியாயிற்று. தல்போத்து ஒரு கையெழுத்துப் பிரதியில் குறித்துவைத்த மனவல்லயச் செபங்கள் அவர் எம்பெருமான்மீது வைத்த அன்பின் அகோரத்தை வெளிப்படுத்துகின்றன. "யேசுவின் இருதயமே, என்னைக் கவர்ந்திழுத்தருளும். நான் உமது பரிமளங்களின் வாசனையில் ஓடிவருவேன்." "யேசுவே, உமது கிருபையையும் நேசத்தையும் எனக்குத் தந்தருளும், நான் போதிய செல்வனாவேன்." "அடைக்கலாங்குருவி தனக்கொரு உறைவிடத்தையும் காட்டுப்புறா தன் குஞ்சுகளைக் காப்பாற்ற ஓர் கூட்டையும் கொண்டிருக்கிறது. உமது இருதயம்தான், என் யேசுவே, எனது இளைப்பாற்றியும் சயனமுமாய் இருக்கக்கடவது." "யேசுவே, என் கண்களும் இருதயமும் உமது திரு இருதயத்தின் காயத்தில் எப்போதும் படிந்திருப்பனவாக." "யேசுவின் இருதயத்தில் நின்று எம்மைப் பிரிப்பவர் யார்?" "யேசுவின் இருதயமே, என் இருதயத்தின் பற்றுதல்கள் எல்லாவற்றிற்கும் ஏக நோக்கமாயிரும்." "கர்த்தாவே, உமது இருதயத்தில் நின்று பாய்கிற தண்ணீரை எனக்குத் தந்தருளும், நான் ஒருபோதும் தாகமா



யிரேன்." "யேசுவின் இருதயமே, பெலவீனரின் தாபரமே, உமது பெலத்தினால் என்னைச் சூழ்ந்துகொள்ளும்" என்று இப்படியான உருக்கமுள்ள வாக்கியங்களையே அவர் சேர்த்து வைத்துச் சொல்லிக்கொண்டுவருவார். தேவ அன்பின் இனிமையை உற்றறிந்தமையினாலேயே இப்படிச் செய்தார். யேசுவின் திரு இருதய நேசத்தைக்கவர அவருடைய திருத்தாயாரின் திவ்விய இருதய மூலமாகப் போவார். அவர் நாள்தோறும் சொல்லிவந்த திரு இருதயச் செபமாலையில்வரும் ஒவ்வொரு பிரியதத்தத்திலும் அவர் அந்த மாசில்லாத மாதாவுக்குக்காட்டிய அன்பு, அந்த மாதாவின் திரு மகனாருடைய அன்புக்கு வழிதிறந்துவிடுவதாயிற்று.

## தேவ நேசத்தினுதித்த பிறர்சிநேகம்

தல்போத்துவின் ஆத்துமத்திற் பற்றி எரிந்துகொண்டிருந்த தேவநேசமானது பிறர்சிநேகமாகப் பரந்து வெளிப்படலாயிற்று. அவர் தமது சீவிய காலம் முழுதும் அதிகப்பற்றாய் ஒரு கிழமையில் பன்னிரண்டு பதின்மூன்று ரூபாவுக்குமேல் சம்பளம் பெறவில்லை. அதில் அரைவாசிக்குமேல் தான தருமத்துக்காகச் செலவழித்துப்போடுவார். ஆத்தும ஈடேற்றத்தில் ஆவல் பூண்டு, பிறதேச மீசாங்களுக்காவும் பொருள் உதவுவார். இம்மீசாங்களுக்கு மூன்று குருமாரைப் படிப்பித்து அனுப்புதற்கு உதவமுயற்சித்தார். இதெல்லாம் கடும் உழைப்பாலும் ஒறுப்பனவாலுமே நிறைவேறினது. நல்ல உடுப்பை அணியாமலும், தொழிலுக்கு வேண்டியளவில் மாத்திரம் பெலனைத் தரும் உணவைத்தவிர வேறொன்றும் புசியாமலும் தமது தாழ்ந்த நிலைக்குத் தக்க உதவிகளை வேதபோதக நாடுகளின் குருமாருக்கும் சன்னியாசிகளுக்கும் ஏழைத்தொழிலாளிகளுக்கும் செய்துவந்தார். தமது அந்தியகாலம் மட்டும் இப்புண்ணிய முயற்சியை வீரசூரத்துடன் நடத்தி, தமது மரணத்திற்குப் பதினெட்டு மாதத்திற்கு முன்னும், தாம் உழைப்பின்றி யிருக்கையில், தமக்குப் பணம் எவ்வளவோ அவசியமாயிருந்த அக்காலத்திலேயும், சீனதேச மீசாங்களுக்காக முப்பது சிலின் அனுப்பிவைத்தார். இப்படியே மரண பரியந்தம் தற்பரித்தியாகத்தோடு கூடிய தருமத்தைக் கடைப்பிடித்தொழுகினார்.

இத்தொழிலாளி விசேஷ ஊக்கத்தோடு அனுசரித்த இன்னுமோர்வித தருமம் என்னவென்றால், சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்குமாக மன்றாடுவதாகிய ஞானத்தருமமாம். அவரது தேவபத்தியை அறிந்த பலர் அவருடைய செபங்களின் சகாயத்தை ஆசித்துத் தேடநேர்ந்தது. இவ்வித ஒத்தாசையை எம் வயோதிக தேவதொண்டர் தடையின்றிச்செய்ய உடன்படுவார். ஆயினும் செபத்தின்முடிவு எப்படிவந்தாலும் தேவ சித்தத்திற்கு அமைந்து நடக்க வேணுமென்ற போதனையையும் தமது செப உதவியைக் கேட்போருக்கு ஊட்டாமல்விடார். அவர் எப்போதும் தேவசித்தத்துக்கு அமைந்த மனதோடு செய்த செபம் பலன் விளைகாமற்போனதும் அரிது. பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

005212

கொண்ட நன்மைகளுக்கு நன்றியறிதலாய் பலமுறை அவருக்குப் பணக் காணிக்கைகள் கிடைத்தபோது அவைகளை அவர் தானதருமத்திலேயே செலவழிப்பார். உலகத்தில் துன்பப்படுவோருடன் அனுதாபங்கொண்டு அவர்களுக்காக வேண்டுதல் புரிந்துவந்தவர் உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் அந்தரித்த ஆத்துமாக்களுக்கும் உதவிசெய்ய முயன்றார். அவ் ஆத்துமாக்களுக்காக அநேக பூசைகளை ஒப்புக்கொடுத்தும், தினம் செபமாலை ஓதியும் வருவார்.

மத் தல்போத்து தாம் செபத்தினாலும் கைப்பொருளைக்கொண்டும் செய்த பிறர்சிநேகக் கிருத்தியங்களை ஒருவருக்கும் தெரியாமல் மறைத்துக் கொண்டு சருவேசுரனிடத்திலேயே முழுச்சம்பாவனையையும் பெறத்தேடினார். ஆயினும், அவர் செய்த தருமங்கள் விரைவில் வெளிவரத் தொடங்கின. எப்படியெனில், அவர் பலமுறையும் தம்முடைய பெயரை வெளிப்படுத்தாமலே பொருளுதவிகளைச் செய்தபோதும், அவைகளை முற்றாக மறைத்து வைக்கக் கூடாமற்போயிற்து.

அப்பால், இயல்பாகவே முரண்டாகக் கதைக்கப்பழகியிருந்த அவர், தமது பேச்சிலும் பிறர்சிநேகத்தை அனுசரிக்க வருந்தினார். எத்தனையோ தடவைகளில், நீதிக்குமாறான காரியங்களைக் கண்டித்துப் பேசவேண்டியிருந்தபோது, அவர் வாயிலே பிறர்சிநேகத்துக்குப் பொருத்தமில்லாத கடுமையான வார்த்தைகள் வரும். அவ்வேளைகளில் தம்மோடு கொடிய சமராடியே தமது நாவை அடக்கி நட்பு லட்சணந் தவறாதவகையில் பேசுவார். மிக அருமையாகவே அவர் இவ்விஷயத்திற் தவறிப்போய், ஏறுமாறாய்ப்பேசிப் பிறர் மனதை வருத்தியதுண்டு. அத்தருணங்களில் அவர் உடனே மன்னிப்புக் கேளாமலோவிடார். வேறுதருணங்களில், தாம் நீதிப்படி உரித்தாடத்தக்கதாயிருந்த ஒரு காரியத்தைப்பற்றித்தானும் பேசப்போனால் சட சடப்பாய் உரையாடிப் பிறர்சிநேகத்துக்குப் பங்கம் வருவிக்கலாகும் என்று அஞ்சி, தம்முடைய உரித்தையும் கைவிட்டு மவுனமாய் நின்றுவிடுவார். இவ்விதமான பிறர்சிநேக உறுதியை அவர் செபத்தின் வழியாகவே அடைந்துகொண்டதாகத் தோற்றுகிறது. ஒருநாள், ஒரு முதலாளியோடு பேசிய விடத்தில், தாம் ஏதோ அவருக்கு மாறாகச் சொல்லிப்போட்டதென்று பொறுதிகேட்டார். அந்தமுதலாளி தொழிலாளிகளுள் வழக்கமில்லாத இவ்விதமிருதுகுணத்தைக் கண்டு பிரமிப்படைந்து, அவர் இப்படிப் பொறுதிகேட்கவந்தது எதுக்காக என்று கேட்க அவர்: "ஆண்டவர் நான் சொல்லிய சொல்லுக்காப் பொறுதி கேட்கவேணும் என்று எனக்குக் கற்பித்தார்" என்றார்.

மத் தல்போத்துவை அவர் கூட்டாளிகளெல்லாரும் நேசிக்கலானார்கள். இதில் ஆச்சரியமில்லை. அவருக்குப் பணத்திலே ஆசையில்லை. தன்னயங் கருதி ஒன்றைச் செய்ய அவருக்குத் தெரியாது. அவர் தம்மைத்தாமே சிறு



மையி லறைந்துவிட்டபடியால் அவருடைய பிறர்சிநேகம் வீராவேசம் பொருந்தியதாய் விளங்கிற்று. அந்தப் பிறர்சிநேகம், அவர், தம்மைப் படைத்தவர்மேல் வைத்த தணியாத அன்பிலிருந்தே ஊற்றெடுப்பதாயிற்று அன்றோ!

## ஐந்தாம் அதிகாரம்

### பரிசுத்த கற்பின்பேரில் அபிலாசை

குடியர்கள் காமாதுரராயும் இருப்பது வழக்கம். தல்போத்துவோ இவ்விஷயத்திலே முழுதும் வழக்கத்துக்கு மாறானவராய்க் காணப்பட்டார். தொழிலாளிகளான ஐரிஷ்காரருக்குள்ளே குடியர்கள் உண்டு. ஆயின், அவர்கள்கூட, பெண்பாலாருக்கு மரியாதைபண்ணுவதிலும் அன்னோருக்கு யாதொரு அடாத்துச் செய்வதைத் தங்கள் மதிப்புக்குப் பங்கம் என்று வைத்துக்கொள்வதிலும் பேர்போனவர்கள். இது அவர்களிலே நன்றாகச் சுவறியிருக்கிற வேத விசுவாசத்தின்பயனே என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

தல்போத்து ஸ்திரீபாலாரிடத்திலே கொண்ட பெருமதிப்பு அவர் எவ்வளவு குடித்துக் கூத்தாடித்திரிந்தகாலத்திலும் அவரை ஆறுங்கற்பனைக்கு மாறாய் நடக்க நினையாமற்தானும் இருக்கப்பண்ணிற்று. அவரோடு தவறணைக்குப் போய்வந்தவர்களெல்லோருடையவும் சாட்சிப்படி, அவர் எவ்வளவு மஸ்தாயிருந்த வேளையிலும் பரிசுத்த கற்பு எனும் புண்ணியத்தைக் கைவிடவில்லை என்று அறிகிறோம். அவருடைய சகோதரிகள் அவரை நன்றாய் அறிவார்களே. இந்தச் சகோதரிகள் "அவரைப்போலச் சுத்தமான ஒரு படைப்பு இல்லை" என்றார்கள். எளிய ஐரிஷ்காரர் வீடுகளிலே பலமுறையும் ஒரு குடும்பம் முழுதுக்கும் ஒரு அறைதான் புகலிடமாயிருக்கும். ஆண் பெண் சகலரும் ஒன்றாய்த் தங்குகின்ற இப்படிப்பட்ட இடங்கள் சன்மார்க்க சீவியத்துக்கு இடையூறாய் இருக்கவும் கூடும். ஆயினும், எப்போதும் உண்மையான கத்தோலிக்கராய் விளங்குகிற ஐரிஷ்கார எளியோருக்குள், இதனால் எவ்வித தாறுமாறும் உண்டாகாது. இப்படியே, தல்போத்துவின் வீட்டுச் சீவியமும் களங்கம் இல்லாததாயிற்று. வீட்டிற்போல வெளியேயும் அவர் பரிசுத்த கற்பைப் போற்றிவந்தார். பெண்பாலார் எவரோடாவது அவர் விசேஷ சிநேகமாயிருக்கவில்லை. பிறஸ்திரீகளைக் காணுவதும் அவருக்கு அப்பிரீதியாயிருக்கும். தமக்கு இயல்பாய் அமைந்த இந்த நாணத்தை என்றும் காத்துக்கொள்ளவே விரும்பினார். அவருடைய தாய், அவர் விவாகஞ் செய்து கொண்டால் விவாக அந்தஸ்தின் கடமைகளின் நிமித்தம் ஓர்வேளை குடிவெறியை விட்டுவிடுவார் என்று யோசித்து, அவரை மெய்விவாகத்தில் உட்படக்கேட்டபோது அவர் மறுமொழியாக, தம்மை உலகத்திற்குக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவந்த தாய் இருக்கும்போதே தமக்குத் தாரம் வேண்டாமென்று விடை பகர்ந்துவிட்டார். மனந்திரும்பு முன்னரேயும் அவர் விரத்தத்துவத்தின் இன்பத்தை அறிந்திருந்தார் என்று தோன்றுகின்றது. எப்படியோ, அவர் தம்மை மறந்து தாய்க்கு என்றும் துணையாய் இருக்க விரும்பின தற்பரித்தியாக சீலமே அவர் மனந்திரும்புவதற்கும் ஓர் வழிவகையாயிற்று எனலாம்.

## கற்பினுக்கரசி பேரிற் பத்தி

மதுமயக்கத்தை மறந்து மனந்திரும்பியபின் முன்னோர்போதிலும் அவருக்குக் கைவராத ஓர் பெரும் நேசம் அவர் மனதைக் கொள்ளைகொண்டு, அவர் கற்பில் என்றும் பிரமாணிக்கமாய் இருக்கத் தூண்டிவிட்டது. அது என்னவென்றால், அவர் மாசில்லாத மாதாவில் வைத்த நேசமே. தமது உலக மாதாவுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதிலே தள்ளாடித் தத்தளித்த ஒரு வேளையில், அவர், பரலோக மாதாவை மன்றாடியபின் அந்த வாக்கைத் திடமாக்கிக்கொண்டார். அதெப்படியெனில், அவர் ஒரு முறை ஓர் புரொட்டெஸ்தாந்த பாதிரியாருக்கு வீடுகட்டிக்கொண்டிருந்தபோது, அங்கே சமையல்செய்யும் பெண் ஒருத்தி தல்போத்து தன்னை விவாகஞ்செய்யக் கேட்டாள். அவர் தாம் ஒரு நவநாட்செபஞ் செய்து தேவசித்தத்தை அறியுமட்டும் மறுமொழிசொல்ல முடியாது என்று சொல்லி, அப்படியே நவநாள் செய்துமுடித்தபின், தாம் எப்போதும் ஒன்றியாயிருக்கவே தீர்மானித்துக்கொண்டதாக விடைகொடுத்தார். தேவதாயாரின் உதவியினாலேயே இந்தத் தீர்ப்புக்கு வந்தாரென உத்தேசிக்க இடமுண்டு. ஏனெனில், சிலகாலம் சென்றபின், வேறொரு தொழிலாளி அவர் ஒன்றியாயிருப்பதைப் பற்றி வினவியபோது அவர் "பரிசுத்த கன்னிகையே என்னை விவாகம் செய்யாதிருக்கச் சொன்னார்" என்று தெரிவிக்க நேர்ந்தது. தேவதாயார் தமக்குப் புரிந்த உதவிக்கு நன்றியறிதலாக ஒவ்வொருநாளும் அவருடைய மாசில்லாத உற்பவத்தின் சின்னமந்திரமாலையையும் அதே பெயருள்ள செபமாலையையும் ஓதிவருவார். இம்மாதாவே, அத்தொழிலாளி சற்பிரசாதம் பெறப் பின்னிட்டு நிற்கையில், அவநம்பிக்கையின் பிசாசை நசுக்கி அதின் அடிமைத்தனத்தினின்று அவரை மீட்டார்.

மரியாயின் மூலமாய் அவர் பெற்ற வெற்றியின்பின் சற்பிரசாத விருந்தை இன்ப பரவசத்துடன் நாள்தோறும் அருந்திவரவே, தேவ கிருபையினால் அவர் மேலும் பரிசுத்தராகி சரீரச்சட்டைசாத்திய சம்மனசுபோலானார். அந்தப் பரம போசனத்தினால் தேவ சுபாவத்தில் பங்கு பற்றப்பற்ற, அவருடைய ஆத்துமத்திலே வரப்பிரசாதம் பொங்கித்தேங்கி, "மனிதன் அதன் பெலத்தைக்கொண்டு ஆதாமினால் அடைந்த கீழ்மையிலும் இழிவிலும் நின்று மேலே கிளம்புகிறான்" என மத் தல்போத்து தாமே குறித்தபடி, பாவ அழுக்



கையெல்லாம் அகற்றும் சக்தியை நிரம்பப் பெற்றுக்கொள்ளலானார். கொண்டு, உலகப்பற்றை அறுத்து கடவுள் ஒருவரிலேயே மனதைச்செலுத்தி, குழந்தைக்குரிய வெள்ளை மனதோடு திரு இருதயத்தின் அன்பைத் தேடி வந்தார். "புத்திசாலிகளுக்கும் கல்விமான்களுக்கும் அல்ல சிறு குழந்தைப் போக்கு உடையவர்களுக்கே மோட்ச ராச்சியம் உரியதென்று வாக்குப்பண்ணப்பட்டது" என்று மத் தல்போத்து குறித்தவண்ணம், அவர் தேவநற்கருணையின் மாசற்ற இராச்சியத்தைக் கவர்ந்துகொண்டார். அவர் குழந்தைபோல வருவதிலே விருப்புவைத்தபடியால், சிறுவர்கள் மத்தியில் இருப்பது அவருக்கு ஆனந்தமாயிற்று. மாசின்மையின் மகிமையை அவர்களுக்கு விளக்குவது அவருக்குப் பெருமகிழ்ச்சி. தம்முடைய சின்னச் சிநேகிதர்களுக்கு நத்தால் தினத்திலே பண உபகாரஞ்செய்து அவர்களது சின்ன நெஞ்சுகளை மகிழ்விப்பது அவரது வழக்கம். நத்தால் திருநாள்தான் குழந்தைகளின் பெரிய விழாவல்லவா? தாம் செபத்தியானத்திலிருக்கும்போது பிறர் காணாதிருக்க எப்போதும் ஆசித்தவர், சிறுபிள்ளைகளையோ பக்கத்தில் வைத்துக்கொண்டு செபிக்கவிரும்புவார். சருவேசுரனால் விசேஷமாய் நேசிக்கப்படுகிற சிறுவர்கள் கிட்ட இருப்பது அவருடைய பத்தியை மேலும் மேலும் தூண்டுகிற ஒரு ஏவுதலாயிருக்கும்.

## சிறுபிள்ளை மார்க்கம்

சிறுவர்களில் மத் தல்போத்துகொண்ட விசேஷ அன்பின் தொடர்பிலே, சிறுபிள்ளை மார்க்கம் என்ற பத்திநெறியின் கண்ணாடியாகிய அர்ச். சின்னத் தெரேசம்மாள்மேல் அவர்கொண்ட பத்தியையும் இங்கு குறிப்பிடுவோம். அவளை அர்ச்சியசிஷ்டவளெனத் திருச்சபை தீர்ப்பிடுமுன், தல்போத்து அந்நோக்கத்திற்காகச் செபித்துவந்தார். பின்பு, அவர் அகம் மகிழும்படியாக அவளது திருச்சுரூபம் பீடங்களின்மேல் ஏற்றப்பட்ட போது, அவள்பேரால் கட்டிய கோயில் ஒன்றுக்கு தம்மால் இயன்ற பணஉதவி செய்தார்.

“அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்ற பழமொழிக்கிணங்க, மத் தல்போத்துவில் விளங்கிய கற்பெனும் புண்ணிய விருப்பு அவர் வதனத்திலும் தோற்றியது. தெருவில் நடக்கும்போது, பாவமற்ற காட்சிகளைத்தானும் பாராமல், நிலத்தை நோக்கிய நேத்திரங்களோடு போவார். ஒருபோதும் மினுக்கான உடைகளை அணியார். திவ்விய சற்பிரசாதம் பெறும்பொழுது மாத்திரம் துப்புரவான உடுப்புப்போட்டிருப்பார், அனந்த பரிசுத்தரின் சமுகத்திலே அழுக்கை அல்லது கூதறைத்தனத்தைக் காட்டும் கோலத்தோடு போவது அவருக்கு அரோசிகமாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாய், அவரது வாக்கும் அவரது உடைநடையைப்போலத் தூய்மை பொருந்தி விளங்கிற்று. பிறருடைய அசுத்த பேச்சைக் கண்டிக்க ஒருபோதும் பின்வாங்கார். கெட்ட பேச்சுக்காரரைத் தடுக்க இயலாத சமயங்களில், தாம் வைத்திருக்கும் குருசை எடுத்துக்காட்டுவார். அத்தோடு, வழக்கமாய், அசப்பியமான பேச்செல்லாம் நின்றுவிடும். அவர் அசங்கிய பேச்சை எப்போதும் விரோதித்தபோதிலும் நகைச்சுவை அறியாதவருமல்ல, ஒரு பகிடிப்பேச்சை விளங்கிக்கொள்ள மாட்டாதவருமல்ல, எல்லா ஐரிஷ்காரரையும்போல அவரும் சிரிக்கப்பண்ணும் பேச்சில் வல்லவர். சருவேசுரனுடைய மக்களுக்குரிய நகைச்சுவை அவரிடத்தில் போதியமட்டும் இருந்தது. தகாத பகிடிக்கதைகளையோ ஒருபோதும் சகியார்.

---

## ஆரும் அதிகாரம்

---

### பரிசுத்த கன்னிகைபேரில் பத்தி

ஆதாமின் சந்ததியில் ஒருத்தியே மாசில்லாமல் உற்பவிக்கவும், கன்னிமை குன்றாது மாதா ஆகவும், தேவனின் திருத் தாயாராய் இருக்கவும் பாக்கியம் பெற்றாள். பரிசுத்த கன்னிகை, தான் அடைந்துகொண்ட மேன்மை தங்கிய இந்தவரங்களால், உலகத்திற்கு நன்மைபுரிய விசேஷித்த வல்லமை உடையவளாதலால் அவள் மூலமாய் உலகத்தார் பெற்றுக்கொள்ளும் சகாயங்கள் எண்ணுக்கடங்காதவைகள். அயர்லாந்தும் இவ் அற்புதகன்னிகையால் அடைந்துகொண்ட நன்மைகள் அநேகமே. ஐரிஷ்காரருள்ளே மங்கையரின் கற்பும், ஆடவரின் தைரியமும், துறவிகளின் தபசும், பாலர்களின் தூய்மையும் இவ் உன்னத கன்னிகையில் நின்றே ஊற்றெடுத்துப்பெருகி அவர்கள் தேசத்தை ஓர் புண்ணிய நந்தனவனம் ஆக்குகின்றது.

மத் தல்போத்துவும் தம் முன்னோரைப்போல மரியாயின்மீது பத்தி மிகுந்து ஒழுகினார். அவர் தாயார் இப்பத்தியை அவருக்கு முலைப்பாலுடன் ஊட்டிவந்தாள். அவள் நாள் முழுவதும் செபமாலையும் கையும் ஆகவே காணப்படுவாள். "தாயைப்போற் பிள்ளை, நூலைப்போற் சேலை" என்றபான்மையாய், அவளது பாலனும் அவளைப்போல் செபமாலைப் பத்தியில் வளர்ந்து வந்தது. தல்போத்து குடிவெறி மயக்கத்தினால் வருந்திய நாட்களிற்தவிர, மற்றைய காலத்தில் இப்பத்தியை மறக்கவில்லை. விரத்தத்துவத்தில் அவர் கொண்ட விருப்பாலும், அவர் இக் கற்புக்கரசிபேரில் கொண்டபத்தியாலும் தாம் மணம் புரியாது விரத்தனாய் இருக்கும் பொருட்டு அவளது அடைக்கலத்தை அண்டினார். குடிவெறிக் குணுங்கின் அடிமையில் நின்று அகல



வும், பயங்கர அவநம்பிக்கை எனும் அகழியில் நின்று மீளவும் இத்திவ்விய தாயே அவருக்கு உதவிசெய்து அவரைத் தம்முடைய திருக்குமாரனின் சமுகத்தைச் சேரப்பண்ணினாள்.

இவ்விதம் தாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக எங்கள் ஏழைத் தொழிலாளி அடைக்கல மாமரிக்கு அனவரதமும் நன்றிகூற மறவாதிருந்தார். செபத்தினால் பரலோக ராக்கினியுடன் ஒன்றித்து, அன்னியோன்னிய அன்பினால் அலர்ந்து மலர்ந்தார். அவர் தேவமாதாவின் சிறுச் சுரூபம் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு அதினால் குறிக்கப்படும் பரமதாயுடன் சாதாரண சம்பாஷணை செய்வதை அவரைப் பெற்றவள் பலமுறை கண்டாள். சயனிக்கும்போதும் அச்சுரூபத்தை மார்பில் அணைத்துவைத்துக் கொள்ளுவார்.

தல்போத்து மாசில்லா மாதாவை மன்றாடுவதற்கு தொகையிலும் வகையிலும் விசேஷித்த செபங்களை உபயோகித்தார். பதினைந்து காரணிக்கம் கொண்ட செபமாலையையும், பரிசுத்த கன்னியின் சின்ன மந்திரமாலையையும், மாசில்லா உற்பவத்தின் செபமாலையையும் கிரமமாய் ஓதிவருவார். செபமாலைக் கூட்டத்தாருடன் சேர்ந்து வேறு பத்திக் கிருத்தியங்களையும் அனுசரிப்பார். திரிகாலச்செபம் தவறாது பகிரங்கமாயும், பின்னேரத்தில் கோயிலுள்ளும் சொல்லிவருவது அவருடைய வழக்கம். வேலைத்தலத்தில் கூட்டாளிகளின் கேலிகளையும் கவனியாது செபஞ் சொல்லுவார். இவ்விதம் அவரது விசுவாசம் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாய் விளங்கிற்று.

தேவநற்கருணைப் பத்தியுடன் மரியாயின் வணக்கத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து, கன்னிமாதாவின் திரு நாட்களிலேயே இருதடவை ஒரேதினத்தில் 21 பூசைகள் கண்டார். திருமகனின் சிலுவைப்பலியுடன் மாதாவின் வியாகுலமாகிய மனப்பலியும் கலந்து மனுக்குலத்தை ஈடேற்றியதற்கு நன்றியறிதலாய், தேவமாதா திரு நாட்களைப் பத்திவைராக்கியத்துடன் கொண்டாடுவது அவருக்கு மிக்க அக்களிப்பைக் கொடுத்தது.

"பரிசுத்த மாதாவே, யேசுநாதரிடம் இருந்து அவரது பேதமையில் ஒரு பங்கை நானும் பெறப்பண்ணும்" என மத் தல்போத்து மன்றாடியதால், அவர் வேண்டுதலுக்கு இரங்கிய தேவதாய் அவரை ஒரு பெரிய தபோதனர் ஆக்கிவிட்டனள். அவளது உத்தம பத்தியை ஊட்டும் புஸ்தகம் ஒன்று (*True Devotion to the Blessed Virgin*, by Blessed Grignon de Montfort) அவர் கைக்கு எட்டியது. அப்புத்தகமே பதினாலு வருஷங்களாய் அவர் இருப்புச் சங்கிலிகள் அணிந்து தவஞ்செய்ய அவரைத் தூண்டிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மனதில் பரிசுத்த மாதாபேரில் அன்பு நிறைந்து தேங்கியது. அதன் மூலமாய் அவளுடைய திருச்சுதனின் நேசம் பெருகி வழிந்தது. யேசுவும் மரியாயும் அவர்முன் எப்போதும் சமுகமாய் இருந்ததுபோலக் காணப்பட்டது. அவருடைய சகோதரி ஒருநாள் அவரை வீட்டில் தனியே விட்டுச்செல்லப் பின்னிட்டு நின்ற பொழுது, அவர் அவளை நோக்கி, "நீர் என்னோடிருந்து செய்யக்கூடிய நன்மை என்ன? நான் இங்கே மரித்தால், யேசுவும் மரியாவும் என்னுடன் இருப்பார்கள்" என்று வசனித்தார்.

மாதாவின் மகா வியாகுலமும், அவளது மதிக்கரிய மாசின்மையும் மத்தல்போத்தின் மனதைக் கவர்ந்தன. அந்தத் தேவதாயின் பத்தியால் அவர் சஞ்சலத்தில் வஞ்சகமற்ற நேர்மையும், கவலையில் கபடில்லாத நம்பிக்கையும், அசுத்தத்தில் அருவருப்பும், தூய்மையில் அகமகிழ்ச்சியும் உடையவராய் விளங்கினார். சிலுவை அடியில் நின்று தியங்கிய வியாகுல மாதாவின் துயரம் அவருக்கு இருதய உருக்கத்தையும், அவளது ஒப்பற்ற தூய்மை உள மகிழ்ச்சியையும் வருவித்தது.

---

## ஏழாம் அதிகாரம்

---

### வீரத்துவ செபச் சீவியம்

ஐரிஷ்காரர் தேவ ஐக்கிய சீவியத்தில் கீர்த்திவாய்ந்தவர்கள். நேரத்துக்கு நேரம் சில வாய்ச்செபங்களைச் சொல்லிவிடுவது செபச்சீவியமல்ல. இருதயமும் அறிவு உணர்வுகளும் இடைவிடாது பரலோகத்தை நோக்கிச் சுயமாய் உயர்ந்துகொண்டிருப்பதுதான் செபச்சீவியம். ஐரிஷ் சனங்கள் இவ்வித செபத்திற் பழகினவர்கள். அவர்கள் பேச்சுவார்த்தைகளும் தொழில் துறைகளும் அவர்களுக்குச் சதா தேவசன்னிதானத்தை நினைவூட்டிக்கொண்டிருக்கும். ஐரிஷ்காரர் தொழிலாளியின் தலைமேல் ஆசீர்வாதம் பொழிவார்கள். துன்பத்தில் தேவ இன்ப பராமரிப்பைக் காண்பார்கள். மகிழ்ச்சியில் பரமனின் புன்னகை பூத்த வதனத்தைக் கண்ணுற்று "தேதேயும்" தோத்திரம் பாடுவார்கள். பலவகையாலும் அயர்லாந்து தேசத்தின் ஆகாயந்தானே பிரார்த்தனை நிறைந்து, சருவேசுரனின் சன்னிதானம் செறிந்திருந்ததென்று சொல்லலாம். அந்தக் கத்தோலிக்கு நாட்டைத் தரிசிக்கும் அன்னியர்கள் தங்களையறியாமலே தாங்களும் பரலோக சிந்தனையில் மூழ்குவார்கள். அங்கிலேய கந்தர்புரிப் பிரதம பாதிரியாரின் மகனும், மனந்திரும்பியபின் கத்தோலிக்கு குருவாகி அநேக அரிய நூல்களை எழுதியவரும் ஆகிய றபேட் ஹியூ பென்சன் ஆண்டவர் அயர்லாந்துக்குச் சென்றிருந்தபோது, அப்புண்ணிய நாட்டின் தரிசனை தமக்கு ஓர் ஞான ஒடுக்கம்போல் இருந்ததென்றும்,



அங்கு தாம் சுவாசித்த ஆகாயமுமே ஆசீர்வதிக்கப்பட்டதாகத் தோற்றிற்றென்றும், நன் மனமுள்ளோரெல்லாம் பரலோகத்தை நோக்கி ஆன்மாவை உயர்த்தும் பேற்றை அங்கு அடையலாமென்றும் வசனித்தார்.

அத்தேசத்தில் அனைவரும் செபச்சீவியத்தில் அமிழ்ந்தித், தங்களைப் பிறருக்குக் காண்பிக்கும் ஆசையற்று ஒடுங்கியிருந்தமையால், அவர்களுள் வீரத்துவ செபச்சீவியத்தில் சிறந்தவர்களையும் உலகம் அறியாமற்போகும். மத்தல்போத்து சடுதியாய் மரித்ததினாலேதான் அவரில் விளங்கிய இந்த விசேஷம் வெளிப்படுவதாயிற்று. இப்படி நேர்ந்திராவிடின், உலகம் அவருடைய தாழ்ச்சி பொருந்திய செபச்சீவியத்தின் தன்மையை நித்தியமாகவே அறியாமற்போயிருக்கும்.

தல்போத்து தமது செபச் சீவியத்தினால் அடைந்த நன்மைகளை விபரிக்குமுன், அவருடைய தாய் அவரது சாங்கோபாங்க விருத்திக்கு எப்படி ஏதுவாயிருந்தாள் என்று குறிப்பது உத்தமம். அவள் தேவதாயார் பேரில் உருக்கமான அன்பு கொண்டவள் என்று கண்டோம். இதனால் அவளுடைய மகனும், தான் மது மயக்கத்தில் அலைந்து உலைந்த காலத்திலும், செபம் சொல்வதை முற்றாய் விட்டுவிடவில்லை. தாயின் செபக்குணமும் முன்மாதிரிகையுமே அவர் விசுவாசத்தை அடியோடு இழந்துபோகாமல் தடுத்தன. அவளது செபமாலை ஏந்திய கையின் அனுதின காட்சி, அவரை எவ்வித தடைகளையும் நீக்கி ஞாயிற்றுக்கிழமைகளில் தேவதிருப்பலியிற் சமுகமாயிருக்கவும், ஒவ்வொருநாளும் திருச்சிலுவை அடையாளம் வரைந்துகொள்ளவும் தூண்டிவிட்டது. இப்படியே உத்தம மாதாக்களே மக்களைப் பரிசுத்தமாக்க விசேஷித்த ஏதுவாய் இருப்பதைக் கண்டும் கேட்டும் வருகிறோம்.

குடிவெறிக்கூளி மத்தல்போத்தைவிட்டுக் குடியெழும்பிச் சென்றவுடன், தாம் பதினைந்து வருஷமாய் தவரணைத் தாசிகத்தில் செலவழித்துவிட்டகாலம்போக மிஞ்சியிருந்ததைக் கண்டிப்பாய்த் தமது ஆத்துமத்துக்கு ஆதாயமாக்கத் தீர்மானித்துக்கொண்டார்; கண்களையும், கைகளையும் கடவுளைநோக்கி உயர்த்தி வேண்டுதல்புரியத் துவங்கினார். அவரது "வேண்டுதல் சுகந்த தூபமாகவும், கைகளை ஏறெடுத்தல் அந்திப்பலியாகவும்" அனந்த தயாபரரின் சன்னிதிமட்டும் சென்றது. தமது இருதயத்தில் படிந்திருந்த அசுத்த பாசம் நீங்கி அதிலே தேவநேசம் பொங்கும்படியாக, ஒவ்வொரு அந்திப்பொழுதிலும், வேலைவிட்டு வந்தவுடன் சற்பிரசாதப் பேழையின்முன் செபித்தவண்ணம் இருப்பார்.

கறுத்தப் பெரும்பவம் உள்ளேன் எனினும்முற் காலத்திலே
சிறுத்தஇடை மதலேனாள் பிழைகளும் சீஷனுமை
மறுத்த பிழையும் வலப்பாரிசக்கள்ளன் வன்பிழையும்
பொறுத்ததுபோல் ஐயனே என் பிழையும் பொறுத்தருளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வேதநாயகம்பிள்ளை பாடியபடி, அவர் அவநம்பிக்கையின்றி தேவநேசத்துடன் பிரார்த்தித்ததால், முன் பாவிகளாயிருந்து பரிசுத்தராய் வந்தவர்களைப்போல் இவரும் பரிசுத்தராகும் வழியைக் கண்டுகொண்டார்.

பாசப்பற்று அறவே, அவர் இதயம் தேவநேசச் சுவாலை பற்றி எரிந்து, செபத் தியானத்தினால் ஒளிர்ந்து ஞானக்கதிரோனின் சமூகத்தில் மலர்ந்துகொண்டிருந்தது. இரவும் பகலுமுள்ள இருபத்துநாலு மணித்தியாலத்தில் எழு மணிநேரம் தம்மை ஆட்கொண்ட தனி முதலோடு சம்பாஷிக்கவும், நித்திரை செய்யும் மூன்று மணித்தியாலம் தவிர மிஞ்சிய நேரமெல்லாம் தேவநற்கருணைச் சன்னிதானத்தில் செலவழிக்கவும் துணிந்தார். கர்த்தரைக் காணக் கண்கள் தினம் பசிக்க, கடமைப் பணிவிடைகள் இவர் மனதை நசிக்கத் தொடங்கின. வேலையிலிருந்து நழுவக்கூடிய நேரம்பார்த்து முழந்தாளிலிருந்து செபிப்பார். அசனம் அருந்தும்போதும் அதேநிலையில் இருப்பார். கடும் வேலைசெய்யும் நேரம் தவிர, மற்றைய வேளைகளில் செபத்தியான யோகத்தில் அமிழ்ந்திருப்பார். செபமே அவரது ஆன்மாவுக்கு ஆகாரமாய் இருந்தது. செபிக்கச் செபிக்க அவருடைய ஞானச்சீவியம் மேன்மேலும் பெலங்கொண்டது. தேவ வரப்பிரசாதம் பொங்கித் தேங்கியது. பரிசுத்த பருவதத்தின் உச்சிச் சிகரத்தையும் கடந்து பரமனின் பதமலர் அடைந்து அவ்வுலகோர் அனுபவிக்கும் பரமானந்தத்தில் இவ்வுலகிலிருந்துகொண்டே பங்குபெற்றார்.

## தல்போத்துவின் தியானயோகம்

செபத்தின் நிலைகளுள் யோகநிலையையே அவர் விசேஷவிதமாய் விரும்பி அனுசரித்தார், அவருடைய பிரயாசமான தொழிற் சீவியத்தையும் தாழ்ந்த கல்வியையும் நாம் நோக்கும்போது, அவர் இந்த மேலான செபமுறையைக் கைக்கொண்டமை ஒரு புதுமையாய்த் தோன்றும். என்றாலும், எம்பெருமானால் ஆகாததொன்றுமில்லையென்பதற்கு இதுவும் ஓர் அத்தாட்சி. தேவ அனுக்கிரகத்தினால் எவ்வித பேதையும் தெளிவுறலாம்; எவ்வித கீழ்நிலையிலுள்ளவர்களும் வரப்பிரசாத உதவியோடு யோக நிலையை அடையலாம். தல்போத்து தியான யோகத்தை நன்றாயறிந்து அதிற் சிறித்திருந்தார் என்றதை அவர் எழுதிவைத்த குறிப்புகளாற் காணலாம், அவர் எழுதுவது:—" தியானத்திலே நாம் நியாயித்தலினாலும் பத்திமுயற்சிகளாலும் கடவுளைத்தேட வருந்துகிறோம். யோகத்திலேயோ ஏலவே நாம் அறிந்துகொண்டவரை வருத்தமின்றித் தரிசிக்கிறோம். தியானத்திலே, மனம் தனது தத்துவங்களைத் தொழிற்படுத்திப் பாடுபடுகிறது. யோகத்திலோ, கர்த்தர்தாமே கிரியை செய்துகொண்டிருக்க ஆத்துமம் தன் பேரிற் பொழியப்படும் கொடைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது" என்றெழுதினார். தல்போத்து இந்தப் பிரயாசமற்ற ஞான ஒன்றிப்பின் கருத்தை அறிந்திருந்தவர் மாத்திரமல்லர், அதில் சீவித்துவந்தவருமானார் என்பதற்கு ஐயமில்லை.



தேவதரிசனத்தினால் உண்டாகும் பரவசம் அவர் முகத்தில் விளங்குவதையும், வருத்தந்தரக்கூடிய ஒரு நிலையிலே அவர் கஷ்டம் அனுபவியாதிருப்பதையும், பராக்குகளைக் கவனியாமல் அவர் அசைவற்றிருப்பதையும் அவர் செபவேளையில் அனைவரும் கண்டிருப்பார்கள். பூசைநேரத்தில் கண்கள் மூடியபடி அசைவற்றிருந்து அமலனைத் தியானிக்கும்போது, அவர் சரீரம் இருந்தும் இல்லாதவர்போலக் காணப்படுவார். தம்மைப் பலியாக்கிக்கொண்டு அவர் பூசைப்பலியில் சமூகமாயிருந்தபோதெல்லாம், தமது சரீரம் தாபரமற்ற நிலையில் இருப்பதினாலடைந்த வருத்தத்தை மறந்துபோவார். இவ் உன்னத திருச் சடங்கில் இலகுவாய்ப் பங்குபற்ற எப்படிக் கற்றுக்கொண்டாரென்றால், திவ்விய நாதரின் திருப்பாடுகளை முன்னமே தியானித்து வந்தமையாலேதான். தமது பாவத்திற்காகவல்லவோ தற்பரன் துன்பமுற்றுச் சோர்ந்தார் என நினைந்து நினைந்து மனம் கலுழ்வார்.

"என்கைக டிருடவே யுன்கைக ளைக்கட்ட ஈந்தநயவிற் கழுவெனே
ஏற்காத வென்பார்வை யாலுனது திருவிழிகளிடருற்றதற் கழுவெனே
வன்கையுறு கயவருமை வாரா லடித்திட மயங்குற்றதற் கழுவெனே
மதமுறு மகங்கார மாற்றமுண் முடிசிரம் வைத்தகொடுமைக் கழுவெனே
முன்கையை நீட்டியத மேவைகனியுண்ட பவமுற்றியதுணர்ந்
தழுவெனே
முற்பழி தொலைக்கமுனை யுற்றவாணிகள் கைகா லுட்புகுதலுக் கழுவெனே
துன்பமொடு சிலுவையிற் றொங்கியே யுயிர்விட்ட சுகுணமதை
யோர்ந் தழுவெனே
தூயனே திகழைந்து காயனே யென்பவ சகாயனே மலர்வாயனே"

என்று இன்பரசப் புலவரெனப் பெயர் பெற்ற தம்பிமுத்துப் புலவர் புலம்பியவண்ணம், தல்போத்து, தயைநிறைந்த தேவன் தம் பாவங்களாலேதான் அவ்வளவு துக்க வியாகுலங்களையும் பாடுகளையும் அனுபவித்து, "உயர்ந்த மரத்தில் கைகால் அறையுண்டே செம்பால் ஓடிட" இறந்தாரென நினைந்து வருந்தலானார். இத் தவத்தாளி கோயிலில் செபிக்கும்போது அவர் செபக் கோலத்தைக் கண்ணுற்ற யேசுசபைச் சன்னியாசி ஒருவர்: "தல்போத்துவின் தியானத்தோற்றம் ஆலயத்துள்ளவர்களுக்கெல்லாம் ஒரு நவீனமாயிருந்த" தெனக் குறிப்பிட்டிருக்கிறார். இப்படியே மறைவில் ஒதுங்கியிருக்க வருந்திய அவரது புனிதம், அவர் கருத்துக்கு மாறாகவே, சகலரையும் கவரத்தொடங்கியது. அவ்விதமே, அவரது கிரகத்திலும், அவர் யாதோ ஒரு காட்சியைக் காண்பவர்போல கண்ணை ஏறெடுத்து நோக்கிக்கொண்டு செபிப்பதை அவர் தாய் பலமுறை கவனித்திருந்தாள். அவ் வேளைகளில் அவர் யாரோடேயோ பேசுவதுபோலச் சம்பாஷணை ரூபமாய்ச் செபிப்பதையும் நோக்கிவந்தாள். "மத் பரிசுத்த கன்னிகையுடைய தரிசனத்தைக் கண்டுவந்தாரென்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் அதிசிச்சயமானது வேறொன்றில்லை" என்று அவள் சொல்லுவாள். அவர் தாமே, கடவுளுடனும் பரிசுத்த கன்னிகையுடனும் சம்பாஷிப்பதால் தமக்கு வரும் பெரும் ஆனந்தத்தைப்பற்றி, பலமுறைகளில் சொல்லியிருக்கிறார். அவர் தம்முடைய உத்தம தாயார் இறந்தபின், செபத்தினால் மேன்மேலும் தேவைக்கியத்திலே தம்மை ஸ்திரப்படுத்துவதில் மிகச் சாக்கிரதையாய் இருந்தார். அக்காலம் துவங்கி, மனிதர் அறியாது இருட்டில் தனித்திருந்து சருவேசுரனைப் பிரார்த்திப்பது அவரது வழக்கம். என்றாலும் கோயிலில் அவரது சாங்கோபாங்கம் அவர் அறியாமல் எப்படி வெளியரங்கமானதோ, அப்படியே அவர் இல்லத்திலும் விளக்குத் தணிந்துபோன வேளைகளிலெல்லாம் "அவர் தம் அன்பருடன் இரகசியம் பேசிக்கொள்ளுகிறார்" என்று அயலார் சொல்லிவர நேரிட்டது.

## அவரது வாய்ச் செபத்தின் அதிசயம்

தல்போத்து தியானயோகத்தில் ஆனந்தபரவசம் அடைந்தபோதிலும், நாவால் இசைக்கும் சிறந்த செபங்களையும் மதியாமல் விட்டவரல்ல. சொற்ப கல்வியே உடையவராயினும், ஜரிஷ்காரருக்குரிய, நல்ல சொல்லடுக்கிய, பத்தி நிறைந்த பாஷையில் விருப்பமுற்றிருந்தார். ஒரு தொழிலாளியைக் கணிசப்படுத்தத்தக்க சிறு புத்தகத்தொகுதி அவரிடமிருந்தது. இயற்கையாகவே தமக்கு உண்டான நற்சுவையையும் புத்தகங்களையும்கொண்டு, அவர், திருச்சபையின் செபங்களுள் சிறந்தனவாயுள்ளவைகளையெல்லாம் அடுக்கிக்கோத்து நாள்தோறும் படையணிபோன்ற செபவணியொன்றை ஓதிவருவார். செபமாலையின் பதினைந்து காரணிக்கம், பரிசுத்த கன்னிகையின் சின்னமந்திரமாலை, வியாகுலச் செபமாலை, அமலோற்பவச் செபமாலை, ஸ்பிரீத்து சாந்து, சம்மிக்கேல், திருவிருதய செபமாலைகள், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் சின்னச்செபமாலை, பிரதான பிரார்த்தனைகள் என்னுமிவைகளையெல்லாம் நாள்தோறும் ஓதிமுடிக்க, கிறீஸ்து தேவராசாவின் ஊழியத்தில் சிரத்தைகொண்ட ஒரு வீரதீர போர்வீரனாலன்றி ஏனையரால் கூடுமா? அவர் செய்துமுடித்த இந்த ஆச்சரியமான செபமுயற்சியைக் காணும்போது ஜரிஷ்காரர், திவ்விய பூசைக்குப்பின், செபமாலைப் பத்தியாலேதான் வேதவிசுவாசத்தில் அத்துணை திடமுள்ளவர்களானார்களென்பதும் வெளிப்படுகின்றது.

செபத்திலே ஈடுபடுவதில் தமது மனம் தளராமற் கட்டுப்பாடுபண்ணிக்கொள்ளும்பொருட்டு, அவர், சில பத்திச்சபைகளிலும் சேர்ந்திருந்தார். அர்ச். அசிசிப் பிரான்சீஸ்குவின் மூன்றாம் சபையிலும், மாசில்லா உற்பவத்தின் கூட்டம், தேவநற்கருணைக்கூட்டம், செபமாலைக்கூட்டம், நன்மரணச் சபை, செப அப்போஸ்தலர் சபை எனும் இவைகளிலும் அங்கத்தவரானார். தம்முடைய தேசத்தவர்களைப் போலவே, அவரும் அணிவகுப்புள்ள சமுதா



யங்களால் வரும் நன்மையை அறிந்திருந்தார். அன்றியும், தமது விசேஷ செப ஐக்கிய சீவியத்தை மறைத்து அந்தந்தப் பத்திச்சபையின் அங்கத்தவர்கள் செய்வதையே தாமும் செய்வதாகக் காட்டுவதற்காக இப்படிப் பல சபைகளிற் சேர்ந்துகொண்டார் என்றும் தோற்றுகிறது.

பத்திச்சபைகளிற் சேர்ந்தமை ஒன்றைத்தவிர, மற்றப்படி, தமது செபச்சீவியத்தை உலகத்துக்கு மறைத்துவைக்கும்பொருட்டுத் தம்மாலான பிரயாசையெல்லாம் பட்டார். தம்முடைய பரம பிதாவோடு ஏகாந்தமாய்ச் சீவிப்பதில் எவ்வளவு பழகியிருந்தாரென்றால், அவர் தமது ஊருள் எவரையாவது தமது உற்ற சிநேகிதராகப் பாவிக்கவில்லை. தமது வீட்டின் அறையில் மறைந்து செபித்ததுபோல், மரவியாபாரக்காலையிலும் தருணம் வாய்த்த வேளையெல்லாம் ஒரு மூலையில் ஒதுங்கிச் செபிப்பது அவரது வழக்கம். வேலைத்தலத்துக் கருகாமையில் அவர் கட்டிவைத்திருந்த ஒரு குச்சுக்குள்ளே உலக வியாபார அலுவல்கள் மத்தியிலேயும் தவத்தாளிக்குரிய சீவியத்தை நடத்துவார். தாம் செபிக்கும்போது சிறுவர்களை மட்டும் தம்மோடுபோக விடுவார்.

தல்போத்து விசேஷமாய்த் தமது பலியோடுகூடிய சீவியத்தை மறைத்துவைத்திருக்க மிகவும் ஆசித்தார். தேவ திருச்சித்தத்திற்கு அமைந்து துன்பவேதனைகளை அந்தரங்கத்தில் அனுபவிப்பதே அவருக்கு அதிக விருப்பம். சற்பிரசாதப்பேழையுள் அடைபட்டிருக்கும் முறையிடாப் பலிப்பொருளின் நிலைமையைத் தாமும் பின்பற்ற ஆசித்து, தம்முடைய செபத்தோடுகூடிய கஷ்டங்களைச் செபத்தியானத்தில் மறைத்துவைக்கத் தேடினார். முன்சொல்லியபடி, தாம் முழந்தாளுக்கு நேரே காற்சட்டையைக் கிழித்துவைத்து வெறும் முழந்தாளிலிருந்து பிரார்த்தித்ததை, தம்மோடு அளவளாவிய கூட்டாளிகளும் அறியாதபடி, அநேக வருடமாய் ஒளித்துக்கொண்டுவந்துவிட்டார். அங்கம் சங்கிலிகளால் சுற்றிவரையப்பட்டபடி செபத்தோடுகூடிய தமது தொழிற் கடமைகளைச் சரிவரப்பார்த்துவந்து, மரணவேளையிலேயே பிறர் அதை அறியவைத்ததும் ஒரு ஆச்சரியமே.

அவர் தியானத்தில் தனித்திருந்தாலும், தமது சொந்த ஆன்மலாபத்தை மாத்திரம் கருதிச் சுயநேசத்தோடு இருந்துவிடவில்லை. பிறருக்காகவும் தேவனிடம் பரிந்துபேசவும், விசேஷமாய் ஆத்துமத்துக்குரிய துன்பத்தில் வருந்துவோர்க்கு உதவவும் ஆசித்தார். இவ்வித தருமசிந்தையுள்ள செபம் சருவேசுரனுக்கு மிக உவப்பாய் இருந்ததினால், பிறருக்காக இவர் இரந்து கேட்டவைகள் எவைகளோ அவைகள் கிடையாமற்போனது அருமை. அவர் உலகத்தின் பாவ அக்கிரமங்களுக்கு நிந்தைப்பரிகாரமாக அடிக்கடி மன்றாடி வந்ததுமன்றி, யேசுவின் திருநாமத்தை யாராவது தூஷிக்கக்கேட்டால், கூடுமானபோதெல்லாம், உடனே அதைப் பரிகரிக்கும்படியாக, தேவஸ்துதிகளை உச்சரிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டபிளின் மாநகர ஏழைத் தொழிலாளியின் உயர்ந்த சாங்கோபாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு இங்கே காட்டிய அவரது செபச்சீவியம் போதியதாகும். அவர் தாமே சொல்லியபடி, செபவரத்தை அவர் உதாரமான மனதோடு தேடினார். அவர் எய்தியசித்தி செபத்தில் சிறந்த அவரது சாதியாருக்குள்ளேயும் ஒரு சுடர்விளக்காய் இலங்கிற்று.

---

## எட்டாம் அதிகாரம்

---

### மத் தல்போத்து வாசித்த புத்தகங்களும் பேசியவார்த்தைகளும்

சுத்தமானவர்களின் சீவியத்திலே நல்ல வாசிப்பும் சுகிர்த சம்பாஷணையும் எனும் இவையிரண்டும் பூவும் வாசனையும் பொருந்துவதுபோல் இணைந்திருக்கும். சாங்கோபாங்க நெறியில் வளரவிரும்புவோர் சருவேசுரனையும் அவருடைய சிநேகிதர்களாகிய அர்ச்சியசிஷ்டர்களையும் அதிக மதிகமாய் அறிய ஏவப்பட்டு, பரிசுத்த வேதாகமங்களையும் சுத்தவாளர் சரித்திரங்களையும் ஆராய்ந்துகொண்டிருப்பார்கள். தாங்கள் அறிந்துகொண்டவைகளைப் பிறருக்கும் புகட்ட விரும்புவார்கள். நல்ல வேதநூல்களே அவர்களுக்கு உற்றதுணையாகவும், அவர்களுடைய பேச்செல்லாம் பேரின்பம் சுரக்கும் சுனையாகவும் தோற்றப்படும்.

டபிளின் நகரத் தொழிலாளியான எம் சுத்தவாளனைப்பற்றியும் இவ்வாறே கூறலாமெனினும், அவருடைய ஒதுங்கி நடக்கும் இயல்பும் தம்மை முழுதும் மறைக்கவேண்டும் என்று அவர் கொண்ட கருத்தும் அவரது சம்பாஷணைகட்கு எல்லை கட்டியதால், பத்திநூல்களில் அவருக்கிருந்த நுட்ப அறிவு மிகச் சிலருக்கு மாத்திரம் தெரியவந்தது. வேத ஆகமங்களே அவர் மேலான காரியங்களில் எப்போதும் தமது நோக்கைச் செலுத்தப் பண்ணி, அவருடைய ஞானக்கண்ணைத் தெளிவித்து, அவர் தமது சீவியகால மெல்லாம் தேவன் ஒருவரையே தேடச்செய்தன. தாம் அடைந்த ஞானானுபவத்தைத் தம்முடன் ஊடாடிய சகலருக்கும் வெளிப்படுத்த விரும்பியிருப்பார். ஆயினும், அவருடைய மிஞ்சிய தாழ்மையும் சருவேசுரன் ஒருவருடனேயே தாம் இருக்கவேணும் என்ற ஆசையும் அதற்குத் தடையாயிருந்தன.

அவர் மதுபானத்தை விலக்கத் தீர்மானித்தவுடன், அவருடைய சகோதரி அவருக்கு கொடுத்த புஸ்தகம் ஒன்றால், அவரது மனந்திரும்புதல் உறுதிப்பட நேர்ந்தது. அந்த நூலின் பெயர் "கிறீஸ்தவர்கட்குத் திறக்கப்பட்ட நரகம்." அப்புத்தகம் ஏழைத் தல்போத்துவின் இருதயத்தில் பயங்கரம்



உண்டாக்கி, தேவ நீதியின் நடுத்தீர்ப்புகளை விளக்கிக்காட்டியது. அந்தப் புத்தகத்தின் அச்சுறுத்தும் போதனை அவர் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. அதை வாசித்தபோது "பயத்தால் என் உயிர் போய்விட்டது போலிருந்தது" என்று அவரே சொன்னார். திகைப்பை உண்டாக்கி மனதை மாற்றிய அந்தப் புத்தகத்தை, அவர் கைவிடாமல், புதிதாய்க் கட்டுவித்துச் சாகுமளவும் தம்முடன் வைத்திருந்தார். முத்திப்பேறுபெற்ற கிறிஞ்ஞன் டி மொன்ற்வோட் என்பவரால் எழுதப்பட்ட "பரிசுத்த கன்னிகைமேல் உண்மையான பத்தி" எனும் நூலும் தல்போத்தின் சீவியத்தைச் சீராக்க உதவிற்று. இப்புத்தகத்தை வாசித்தபின்பே, தம்முடைய சரீரத்தை வாதிக்கும்பொருட்டு பதினாலு வருஷங்களாய் இரவும் பகலும் இருப்புச் சங்கிலிகளை அணிந்து கொள்ள ஏவப்பட்டார். அந்த ஒரே நூலால் இவர் வியாகுல மாதாவுக்கு ஒப்புக்கொடுக்க நேர்ந்த பலி, எவ்வளவு மகிமைபொருந்தியதாயிற்று!

தல்போத்து, தாம் முதன் முதல் வாசித்த பத்திக்குரிய புத்தகத்தால் அடைந்த தேவபயம் அதிகரிக்க அதிகரிக்க, இன்னும் வேறு நூல்களையும் ஆராய்ந்து பார்க்கத் துணிந்து, ஓர் எளிய தொழிலாளிக்கு இனிமேல் இல்லையென்ற கௌரவத்தைத் தரத்தக்க சிறு புத்தகசாலை ஒன்று தம்வசம் இருக்குமட்டும் நூல்களைத் தேடிச் சேர்த்தார். இவைகளைத் தவிர தம் சிநேகிதரிடத்தில் இருந்து இரவல் வாங்கி வாசித்த புத்தகங்களும் அநேகம். இரவல் வாங்கியவைகளை அவர் எப்போதும் திருப்பிக்கொடுத்துவிடுவார். ஆனதினால், அவைகளின் தொகையையும் தன்மையையும் ஒருவரும் அறியார். நாம் அறிந்தளவில், அவர் வாசித்த நூல்கள் நானாவித ஆழ்ந்த ஞான அறிவை உண்டாக்கும் வகுப்பைச் சேர்ந்தவைகளே என்று தெரிகிறது. அவைகளுள் ஞானசீவியத்தின் அதியுன்னத படியைச் சார்ந்த புத்தகங்கள், தேவ சாத்திரப் புத்தகங்கள், தத்துவ சாஸ்திரப் புத்தகங்களோடு ஞானோபதேச வினாவிடைப் புத்தகங்களும் காணப்பட்டன. இவைகளையெல்லாம் அவர் வாசித்து விளங்கிக்கொண்டாரென நம்ப இடமுண்டு. நியூமன் எழுதிய "அப்பொலோஜியா" (நியாயமனு) என்னும் புத்தகத்தை வாசித்து விளங்குவது அருமை என ஓர் சிநேகிதன் அவருக்குச்சொல்ல, அதற்கு மறுமொழியாக அவர், ஆழ்ந்த கருத்துடைய ஒரு நூலைத் தாம் வாசிக்குமுன் தேவ ஞானமானவரைப் பிரார்த்தித்துக்கொண்டு தொடங்குகிறவர் என்றும், அவருடைய உதவியால் அந்த நூலின் பொழிப்பை நன்றாய்க் கண்டுபிடித்துக் கொள்ளுவாரென்றும் விடை பகர்ந்தார். அவர் எழுதிவைத்த வாசிப்புக் குறிப்புகளும் அவருக்கு இவ்வித ஞானத்திருட்டி இருந்தமையை நிச்சயப்படுத்துகின்றன. அந்தக் குறிப்புகள் அவருடைய மனதில் அதிகமாய்ப் பதிந்த பொருள்களைக்காட்டும். அவைகளுமோ ஞானசீவியத்தின் அருந்துறைகளும் தேவசாத்திரத்தின் உன்னதமான போதகங்களுமாம். மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு செபத்தியானமானது எவ்வளவு அதிசயமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாய் இருக்கிறதென்பதற்கு இஃதோர் அத்தாட்சி. அவரடைந்து கொண்ட ஞானத்தெளிவு அவர் தாழ்மைபோடு உண்மையைத் தேடினதின் பயனாகவும், அவர் சத்தியத்தின் ஆவியாகிய இஸ்பிரீத்து சாந்து சருவேசுரனில் வைத்த விசேஷ பத்தியாலும் உண்டானதென்று சொல்லவேண்டியிருக்கிறது. தாம் உலக கல்வியைப் படியாததினால் தேவ கல்வியிலேயே முழுதும் தங்கியிருக்கவேண்டி வந்ததைப்பற்றி அவர் அகமகிழுவார். அவருடைய கல்விக்குறைவைப்பற்றி ஒருவர் அனுதாபம் காட்டினபோது அவர், "எனக்கு அதிக நன்மையானது என்னவென்று ஆண்டவர் அறிவார்" என மொழிந்தார். உள்ளபடி, இத்தொழிலாளி, தமக்கு அதிக நன்மையானதைச் சருவேசுரன் தந்தருளுவாரென்று தாழ்மையோடு இருந்ததினாலேயே இவ்வளவு ஞானத்தெளிவு உள்ளவரானார். இந்த மனப்பாங்கினாலேதான் அவர் கரவடமற்ற குழந்தைப்பிள்ளையைப்போல் நடந்தார்; பிரகாசத்தின் ஊற்றாகிய தேவ ஆவியானவருக்கும் அன்பரானார். "அறிவுள்ளவர்களுக்கும் கற்றவர்களுக்கும் அல்ல, சிறு குழந்தைத்தன்மை உடையோருக்கே மோட்ச இராச்சியம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது" என்ற நம்பிக்கையோடு அவர் ஞான காரியங்களை அறியத்தேடியதால், உன்னதத்திலிருந்துவரும் உண்மையான ஞானத்தை அடைந்தார். அவர் குழந்தையின் கூர்ந்த நோக்கோடு பார்த்ததினால், மற்றோருக்கு மறைவானவைகள் அவருக்குத் தெளிவாயின.

நல்வாசிப்பைப் பரப்புவதில் அபிமானம்

தல்போத்து தமது இயல்புக்குத் தக்கபடி சேர்த்துவைத்திருந்த வேத நூல்களை வாசித்துத் தாம் நன்மையடைந்ததினால், பிறரும் அப்படிச்செய்யவேவேண்டும் என்ற அபிமானம் அவருக்கு உண்டாயிற்று. தாம் வாசித்த நல்ல நூல்களில் காணும் உத்தம சிந்தனைகளிலே தம் தாயாரும் பங்குபற்றும்படி, வசதிவாய்க்கும்போதெல்லாம், அவள் கேட்க அவைகளை வாசித்துக் காட்டுவது அவரது வழக்கம். நன் மனமுடைய தம் உடன் தொழிலாளிகளுக்கும் தம்முடைய புத்தகங்களை இடையிடையே வாசிக்கக்கொடுப்பார். இந்த மவுனமான போதகத்தினால், தம்மைப்போலப் பிறரும் திருத்தமடையப்பண்ண வருந்தினார்.

நல்ல புத்தகங்களாகிய அப்போஸ்தலர்களை அவர் எவ்வளவு கணிசமாய் மதித்தாரென்றால், வீட்டிலே அவைகளை வாசிக்குமுன், முழந்தாட்படியிட்டு ஆசாரம் செய்யாமல்விடார். இந்த ஆசாரமானது அவர் தாம் வாசித்தவைகளைக்கொண்டு செபஜக்கியத்திலே அமிழ்ந்தியிருந்தாரென்று காட்டுகின்றது.

ஞான புத்தகங்களால் நல்லறிவு ஊட்டப்பட்ட இவ் ஆத்துமம் பிறரோடு சம்பாஷிக்கும்போதெல்லாம் உத்தமமான சிந்தனைகளே வெளிப்படும் அன்றோ? வேத நூல்களுடன் ஊடாடியதினால் அவர் முற்றாக மனம் திரும்புவதற்குமுன் பேசிவந்த மாதிரியையும், பின் பேசிவந்த விதத்தையும் ஒத்துப் பார்க்கும்போது, அவரிடத்திற் தோன்றிய மாற்றம் அதிக துலாம்பரமாகும். மனந்திரும்புமுன் தேவதிருநாமத்தைச் சிலவேளை வியர்த்தமாய்ப் பாவிப்பார். குடிவெறியினால் கருக்கொண்ட இத்துர்ப்பழக்கம் யோசனையில்லாத நடையால் வந்ததேயொழிய மனப்பூர்வமான தேவ நிந்தனையாய் ஒருபோதும் இருந்ததில்லை. வேதவிசுவாசத்தில் முற்றிப்பழுத்த ஐரிஷ்காரர் தேவநிந்தைசெய்ய அறியார்கள். தல்போத்துவுக்கு அந்த நினைவு கனவிலும் வராது. என்றாலும், தாம் மனந்திரும்பியவுடன், முன்னே தாம் அறியாமற் செய்த தேவநிந்தனையின் நினைவால் ஓயாமல் வருந்தி, அதைப் பரிகரிக்கப் பல வழிகளைத் தேடினார். உள்ளபடி, அவர் தேவ திருநாமத்தைப் பூச்சியப்படுத்துவதில் ஒரு அப்போஸ்தலனாய் விளங்கினார்.



தல்போத்து, தாம் சுமந்துகொண்ட இந்தக் கடமையை நினைவுகூரும்படி ஓர் சூழ்ச்சியைக் கையாடினார். இதினால் அவர் ஞானவிஷயங்களில் எவ்வளவு காரியக்கெட்டியாய் இருந்தாரென்று விளங்குகின்றது. அதெப்படி என்றால், குருசில் அறையுண்ட எம்பெருமானை ஞாபகப்படுத்த, தம் சட்டைக்கையின் முன் தொங்கலில் இரண்டு குண்டூசிகளை குருசு வடிவமாய்க் குத்திவைத்துக்கொண்டார். இதினால், அவர் மானிடரை ஆட்கொள்ள வந்தவரின் உந்நத பலியை நினைத்தபோதெல்லாம், திரிபுவனமும் முழந்தாட்படியிட்டுத் துதிக்கின்ற அவருடைய திருநாமத்தைப் பத்தியோடு ஆசரிக்கிறவரானார். இத்திருநாமத்தில் பத்திமிகுந்து அன்பு பெருகவே, உதடுகளின் புனிதத்தைக் காத்துக்கொள்ளும்படி, தமக்கு இயல்பான ஏகாந்தபோக்கிலே இடைவிடாத தன்னொறுப்பு முயற்சிகளில் ஈடுபடத்துணிந்தார். தாம் திருநாமப்பத்தியை அனுசரிப்பதோடு அவர் நின்றுவிடவில்லை. பிறர் அத்திருநாமத்தை அனாசாரமாய் உரைக்கும் தருணங்களில், அவர் மனம் மிகவும் வேதனைப்படும். வேலைநேரங்களில் இவ்வித துராசாரம் சம்பவித்தால், மரவியாபாரக் காலையில் தாம் அமைத்திருந்த குச்சுக்குட் சென்று தேவ ஸ்துதியங்களை நிந்தைப் பரிகாரமாக ஓதுவார். அவ்விதம் செபிக்கச் சமயம் வாய்க்காதிருந்தால், துராசாரத்தைத் தடுக்க வேறு உபாயந் தேடுவார். திருநாமத்தின் தொனி காதில்விழுந்தவுடன் தம் தொப்பியை உயர்த்தி, கர்த்தர் தமது தேவநாமத்தை யோக்கியமில்லாமல் வழங்கும் துரோகிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறாரே என்று சொல்லி எச்சரிப்பார். இவ்வகையாய் தம் உடன் தொழிலாளிகளுக்குத் தேவ சந்நிதானத்தை நினைப்பூட்டியதால் அவர் நன்மை விளைக்கத் தவறியது அருமை.

அவரது சம்பாஷணை

மத் தல்போத்து பிறருடைய அசப்பிய வார்த்தைகளைத் தடுத்ததோடு அமையாமல், தம் வார்த்தைகளையும் மட்டுப்படுத்தி, உலக காரியங்களில் சிந்தை கவிழாது கூடியமட்டும் பரலோக காரியங்களைப்பற்றியே சம்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷிப்பார். அவர் பேசியவைகள் சொற்பமேயானாலும், எல்லாம் புத்தி போதனைக்குரியவைகளே. 1919—1921-ம் வருட ஆங்கில ஐரிஷ் யுத்த காலத்தில் இராச்சியம் முழுவதிலும் குழப்பம் உண்டானபோது, அதைக் குறித்து அவர் ஒன்றும் பேசவில்லை. ஐரிஷ்காரர் அரசாட்சியைப்பற்றி பேசும்போது அதிக உற்சாகம் கொள்ளுவார்கள். ஆதலால் இவ்விஷயத்தில் அவர் தம்மை ஒடுக்கியது வியக்கத்தக்கதே. தம் பிறவிக்குணத்தையடக்கி, பேச்சிலும் உலகப்பற்றை அறுத்து, தம்முடன் உலகவிஷயங்களைப்பற்றிக் கதைத்தவர்களையும் ஆன்ம லாபத்துக்குரியவைகளை ஆலோசிக்கும்படி ஏவிவருவார். தமக்கியல்பான சாதுரிய வசனத்தால் அமலனை அண்டஅனைவரையும் அருட்டிவிடுவார்.

தம்முடைய புண்ணிய முதிர்ச்சியை எவ்விதத்திலும் வெளிவிடாதபடியே, வேதகாரியங்களில், சிலருடன்மட்டும் கிரமமாய்க் கதைப்பார். அவர்களுள் அவருடைய தாயும் ஒருத்தி. அவளுக்கே தம் அந்தரங்க எண்ணங்களை அறிவிப்பார். நசரேத்து ஊரில் ஒதுங்கி வசித்த திருக்குடும்பத்தைப் பற்றிப் பலமுறையும் அவளுடன் சம்பாஷிப்பார். அர்ச். மரியமதலேனாளினதும், எஜிப்து மரியம்மாளினதும் பச்சாத்தாப சீவியத்தையும் வியந்துபேசுவார். வேறு ஆருடன் கலந்து பெசினாரென்றால் மாசற்ற குழந்தைகளுடனேயே. சிறு பிள்ளைகளுக்கு திவ்விய மறையின் போதககங்களை ஓதவே தம் ஒதுக்கிடத்தைவிட்டு வெளிவருவார். கன்னியாஸ்திரிகளுடனே தானும் அவர் வேத காரியங்களைப்பற்றிப் பேசவிரும்பவில்லை. அவர் மாத்தா எனும் வைத்தியசாலையில் வருத்தமாயிருந்தபோது, அங்கிருந்த டொலோறெஸ் எனும் கன்னியாஸ்திரி, அவர் வேதகாரியத்தைப்பற்றி ஒருபோதும் தன்னுடன் பேசவில்லையென்றும், அவருடைய நடக்கையினால் மட்டும் அவர் நல்ல குணமுள்ள சுத்தமான ஓர் வயோதிகரென்று தோன்றிற்றொழிய வேறொரு விசேஷமும் தோற்றப்படவில்லையென்றும் கூறினாள். "யேசுநாதர் என்னுடன் பேச இருக்கையில் நான் உம்முடன் என்ன சொல்லுவேன்?" என அவர் குறித்துவைத்த வாக்கியத்தால், அவர் அதிகப் பற்றாய் தனிமையையே விரும்பினாரெனத் தெரிகிறது.

என்றாலும், அவர் ஞானகாரியங்களை இதமாய் விளக்க அருமையாய் நேரிட்ட தருணங்களில், அவரது கல்வித் திறமும், எடுத்துக்கொண்ட பொருளைத் துலக்கும் நிபுணத்துவமும், தமது சுகுணத்தாலும் இன்பப்பற்றாலும் பெற்றுக்கொண்ட வசீகரமும் கேட்டோர் மனதைக் கவர்ந்தன. அவரைக் காணச்சென்ற ஓர் குலமகள் பின்வருமாறு கூறுகிறாள்:—"நான் அவரது இன்பமான சம்பாஷணையால் பரவசமாய்ப் போனபடியால், நாழிகைவட்டத்தைப் பார்க்குமட்டும், அவருடன் எவ்வளவுநேரம் பேசிக்கொண்டிருந்தேன் என்று அறியாமற்போனேன். நான் அக்கடிகாரம் சரியோவென்று கேட்க, அவர் சரிதானென்றார். அப்போது ஆறு மணி ஆகிவிட்டமையால்



மூன்று மணித்தியாலமாய் அவர் பேச்சை உற்றுக்கேட்டுக் கொண்டிருந்துவிட்டேன். ஆயினும் அது அரை மணித்தியாலத்திற்கு மேலே என்று எனக்குத்தோன்றவில்லை" என்றெழுதினாள். செபத்தியான யோகத்தாலும் ஞானநூல் வாசிப்பாலும் தேவநேசத்தில் அதிகரித்து, மெய்யான கல்வியில்தேறிக் கர்த்தருடன் கலந்து இன்பமயமாய்ப்போன ஒரு படிப்பில்லாத் தொழிலாளியின் வரலாறு இதுவே.

"வாசிக்கவேண்டுமுன் மாமறைநூலை மனமுருகிப்
பூசிக்கவேண்டுமுன் பொன்னடித்தாமரை பொய்மையின்றி
நேசிக்கவேண்டு மறத்தை இறந்தபின் நேர்ந்துபிர
வேசிக்கவேண்டுமுன் வீட்டில் ஐயா விதென்விண்ணப்பமே"

என வேதநாயகம்பிள்ளை விளம்பியபடி நாமும் மத் தல்போத்துவைப் போல் மாமறைநூலை வாசித்து, எம்பெருமானைப் பூசித்து, புண்ணியத்தை நேசித்து, பரலோக பாதையில் தீவிரித்து நடந்து பரகதி அடையப் பிரயாசப்படுவோமாக.

மங்களம்! மங்களம்!—நித்தியசுக மங்களம்! மங்களம்!
எங்கும் நிறைந்திட்டநாதன் எல்லா மறிந்திட்டபோதன்
துங்கம் சேறிந்திட்டவேதன் தூயவடியிணைக்கு
மங்களம்! மங்களம்!

005212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org